முரசொலி

வார இதழ்

ஆசிரியர்: மு.கருணாநிதி

முரசு 4 | 5—7—57 | வெள்ளி | ஒலி 11

பாலமாவோம்; பணிபுரிவோம்!

"ஏந்த அரசியல் கட்சியின் தொடர்பும் கொள்ளாமல் தனித்துச் செயலாற்ற வேண்டுமென்று தபால் தந்தி ஊழியர்களாகிய உங்களுக்கு ஆலோசனை கூறிய அரசாங்கம், இன்று உங்களது கோரிக்கைகளை அலட்சியப்படுத்தி குரலுக்கும் மதிப்பளிக்காது போய் விட்ட காரணத்தால், இன்று நீங்கள் எங்களைப் போன்றவர்களிடம் முறை சொல்லி தேறுதல் வார்த்தைகளையாவது பெறுவோம் என்ற நம்பிக்கையுடன் என்னை இங்கு அழைத்திருக்கிறீர்கள்.

தீயுண்ட வீட்டுக்குள் திண்டாடுகிறவனின் நிலைமையைக் கண்டு, தெருவிலே நின்றவாறு "அதோ, அந்த உத்திரத்தில் ஏறி வெளியே குதித்து உயிர் தப்பிவிடு" என்று யோசனை கூறிவிட்டு வழி நடக்கும் கல்நெஞ்சம் படைத்தவர்களைச் சேர்ந்த கூட்டமல்ல நாங்கள். தீப்பட்டுத் தேகமெங்கும் வெந்துபோயினும் கவலையில்லையென நெருப்பிடையே பாய்ந்து, தவித்திடுவோரைக் காப்பாற்றுவதையே கடமையாகக்கொண்டிருக்கும் குழுவினைச் சேர்ந்தவன் நான்.

தபால் தந்தி ஊழியர்கள், அரசாங்கத்திடம் தங்கள் வேண்டுகோள்களை வைத்திடும்போது, இந்த இலாகா ஒரு சேவைக்கூடம் என அரசாங்கம் விமர்சனம் செய்து சேவையின் சிறப்புபற்றி விளக்கமும் உரைக்கும்.

தபால் கார்டு, கவர் விலை உயரும்போது பொதுமக்களின் கூக்குரலை அடக்குவதற்கு இந்த இலாகாவை "வியாபார நோக்கோடுதான் நடத்தவேண்டியிருக்கிறது என வியாக்யானம் செய்யும்.

பாம்புக்குத் தலையும் மீனுக்கு வாலும் காட்டுகிற ஒரு வகை மீனுண்டு. அதன் பெயர் விலாங்கு மீன். அந்த விலாங்கு மீன் நிலையிலேதான் அரசாங்கம் தபால் ஊழியர்களையும், பொதுமக்களையும் மாறி மாறி ஏமாற்றி வருகிறது பாம்பும், மீனும் ஏககாலத்தில் விலாங்கு மீனை சந்தித்து விட்டால் அந்த வேஷம் வெளிச்சமாகி விடும். அதுபோலவே தபால் தந்தி ஊழியர்களும் பொதுமக்களும் ஒருசேர அரசாங்கத்தின் நடிப்பைக் கண்டுவிட்டால் உண்மை புலனாகிவிடும். அப்படி இருவரும் ஒன்று சேருவதற்கான சூழ்நிலை அமைவதற்கு எங்கள் உதவி தேவைப்படும் என்று கருதித்தான் போலும் என்னைப் போன்றவர்களை இங்கே அழைக்கிறீர்கள்.

நான் ஒரு உறுதி கூறுவேன்; உங்களுக்கும் பொது மக்களுக்குமிடையே நாங்கள் பாலமாக இருந்து, இருவரையும் ஒன்று சேர்க்க எங்களால் ஆன பணிபுரியத் தயாராயிருக்கிறோம்.

முப்பது கோரிக்கைகள் அடங்கிய பட்டியல் ஒன்று பாராள்வோரிடம் நீட்டப்பட்டு, அது குப்பைக் கூடையிலே உறங்கிக் கொண்டிருக்கிறது என்பதை நானறிவேன். உங்கள் கோரிக்கைகள் மட்டுமல்ல; இந்த நாட்டில் எத்தனையோ வேண்டுகோள்கள் டில்லி மாநகரத்தின் பெரிய குப்பைக் கூடையிலே கேட்பாரற்றுத் தூங்கிக் கொண்டுதானிருக்கின்றன. சில ஆண்டுகளில் 'குப்பைக் கூடை" என்ற பெயர் மாற்றப்பட்டு அவைகள் "கோரிக்கைக் கூடை" என்றுகூட அழைக்கப்படலாம்.

வாழ்க்கைப் புள்ளி 150 என்று இருந்தபோது முதல் சம்பளக் கமிஷன் வகுத்த சிபாரிசுகளை ஓரளவு ஏற்று உங்களுக்கு ஊதியம் அளிக்கப்பட்டது. இப்போதோ 150 ஆக இருந்த வாழ்க்கைப் புள்ளி, விலைவாசி உயர்வுகளால், வேறு பல சூழ்நிலைகளால், 400 என்று ஆகிவிட்டது. வாழ்க்கைப் புள்ளி 400 என்று ஆகிவிட்ட நேரத்திலும் முதல் சம்பளக் கமிஷன் சிபார்சின்படியே நடப்பது உசிதமல்ல; இரண்டாவது சம்பளக் கமிஷன் ஒன்றை அமைத்திட வேண்டுமென்பதே அந்த முப்பது கோரிக்கைப் பட்டியலில் முதன்மையானது என்றும் நான் உணருகிறேன்.

இந்தக் கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டதும் நேருவைப் பேட்டி காண வேண்டுமென்று பலமுறை முயன்று தோற்றிருக்கிறீர்கள். பகவத் சந்நிதானம் பூட்டியிருக்கிறது என்றே டில்லி நந்திகள் தாக்கல் கொடுத்துவிட்டன. அய்யோ பாவம்; பஞ்சாப் மொழி வெறிக் கிளர்ச்சியில் ஈடுபட்ட பண்டாரங்களின் தலைவர், ஏதோ ஒரு பத்திரிகையில் எழுதிய 'திறந்த மடலுக்குப் பதில் மடலாகத் தனி மடல் எழுதிய தயாபரராம் பண்டித நேரு பெருமான், பாடுபடும் நாடி நரம்புகளாம் உங்களது முகத்தைப் பார்க்கவும் இயலாது எனக் கூறிப் பறந்து விட்டார் வெளிநாடு! இதற்குமேல் என்ன? வேலை நிறுத்தம் செய்யலாமா என யோசனை கேட்டு அதற்கான ஆதரவைப் பெருவாரியாகப் பெற்று வருகிறீர்கள்.

தபால்காரர்கள் வேலை நிறுத்தம் செய்தால் அது எவ்வளவு பயங்கரமாயிருக்குமென்று யாரும் கற்பனைகூடச் செய்ய முடியாது. பொதுமக்களின் ஆதரவைப் பெற முடியுமா என்று சிலர் ஐயுறலாம். எந்தத் தொழிலாளிக்கும் இல்லாத பிரச்சார வசதியும் வாய்ப்பும் தபால் தந்தி தொழிலாளிக்குத்தான் இருக்கிறது என்பேன் நான். ஆலைத் தொழிலாளி வேலை நிறுத்தம் செய்வதெனில் ஆயிரம் மக்களைக் கூட்டி, தங்கள் அருமருந்தன்ன தலைவனை அழைத்து; வேலை நிறுத்தக் காரணத்தை விளக்குவான். நீங்களோ அப்படியல்ல; தேர்தல் நேரத்தில் அபேட்சகன் வீட்டுக்கு வீடு போய் ஓட்டு கேட்பதுபோல தபால் ஏந்திச் செல்லும் தொழிலாளத் தோழர்கள் தபாலைக்கொடுத்துவிட்டு அந்த வீட்டாரிடம் வேலை நிறுத்தத் தகவலையும் கூறிவிட்டு வரலாம்.

நாளை முதல் சில நாளைக்குக் கடிதம் வராது எனத் துவங்கி, காரணத்தை விளக்கி, காதலனின் கடிதம் பார்த்து நிற்கும்

✽ 12-ம் பக்கம் பார்க்க

3—7—57 மாலை 5 மணிக்கு சென்னை பி. எம். ஜி. அலுவலகத்தில் நடைபெற்ற தபால் தந்தி நிர்வாக ஊழியர் கூட்டத்தில் தோழர்

மு. கருணாநிதி

ஆற்றிய உரையின் சுருக்கம்.

காகிதத் திரை கிழிகிறது! ஜனநாயகக் கொலை தெரிகிறது!

பொதுமக்களிடமிருந்து — வறுமையால் புழுப் போல நெளிந்து கொண்டிருக்கும் ஏழை எளியவர்களிடமிருந்து — நிதியமைச்சர் டி. டி. கே. வரிப் பணத்தைச் சூறையாடும் சூதுத் திட்டத்தை வெளியிட்ட பிறகு இன்று காங்கிரஸ் மேலிடம் சரித்திரத்தில் இதுவரை கண்டிராத மகத்தான எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டிய நிலைமை உருவாகி விட்டது!

பண்டிதர் பதவிக்கு வந்த இத்தனை ஆண்டுகளில் மக்கள் மன்றத்திலிருந்து இப்படி ஒரு எதிர்ப்பை அவர் சமாளித்ததில்லை!

கொலைகாரன் கொலையைச் செய்துவிட்டு; தானே சரணடைந்தது போல வரி என்னும் வாளை பொதுமக்கள் மீது இரக்கமின்றி வீசியெறிந்து விட்டு இப்போது சிக்கனம் — 'செலவுக் குறைப்பு' என்னும் பாணங்களை வீசியிருக்கிறார்கள், பாரத புத்திரர்கள்!

—இதற்காகத்தான் டெல்லியில் நடைபெற்ற அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியிலே தீர்மானமொன்று கொண்டு வரப்பட்டது!

"கராச்சி தீர்மானத்தை யொட்டியும், காந்தியடிகளின் விருப்பப்படியும் இனிமேல் காங்கிரஸ் அமைச்சர்கள் ஒவ்வொருவரும் மாதமொன்றுக்கு அதிக பட்சம் ஆயிரம் ரூபாய்கள் தான் சம்பளமாகப் பெற வேண்டும்!"

—தீர்மானம் இப்படித்தான் இருந்தது!

வெறும் ஆயிரம் ரூபாய்களைத் தான் அமைச்சர்கள் பெறலாம் என்பதைவிட கராச்சி தீர்மானத்தையும், காந்தியடிகளின் பெயரையும் அதில் இழுத்து இணைத்து வைத்தால்தான் கூடியிருக்கும் கனவான்களின் கருத்தினைக் கவரலாம்—என்ற பெருநோக்கத்திலே தயாரிக்கப்பட்டு கொண்டுவரப்பட்டது, அந்தத் தீர்மானம்!

தீர்மானம் நிறைவேறிற்றா? இல்லையா?

இல்லை; நிறைவேறவில்லை; ஏனெனில் வந்திருந்த காங்கிரஸ் கமிட்டிக் கனவான்களில் பெரும்பாலோர்—அதை ஆதரித்து ஓட்டளிக்கவில்லை!

—என்று இதுவரை நாம் நம்பிக்கொண்டிருந்தோம்!

ஏடுகளும், செய்திகளும் அப்படித்தான் கூறின!

"தோற்றுவிட்டதே சம்பளக் குறைப்புத் தீர்மானம்! கேரளத்திலே குறைந்த சம்பளத்திலே அமைச்சர்கள் வழும்போது இதர அமைச்சர்கள்—அவர்கள் காங்கிரஸ்காரர்களாக இருப்பதினால் வாழ முடியவில்லையே!" — என்றெல்லாம் எண்ணினார்கள் பொது மக்கள்!

"கராச்சி தீர்மானத்தைக் காற்றிலே பறக்க விட்டுவிட்டார்களே! பாவம்; காந்தியார் பெயருக்குக்கூடவா அவர்கள் மதிப்பு வைக்கவில்லை? அவர் விரும்பினார் என்பதற்காகக் கதரைக் கட்டிக்கொண்டு அழுபவர்கள் அரசாங்கத்திற்குக் கிடைக்கிற அபரிமிதமான வருமானத்தையெல்லாம் துறந்துவிட்டு மதுவிலக்கை நிறைவேற்றியவர்கள் சர்வோதயப் பாதையிலே பீடு நடை போடுபவர்கள்—அவர்களா, இந்தச் சாதாரண சம்பளக் குறைப்புக்கு சம்மதிக்க மறுத்து விட்டார்கள்? வேடிக்கை! வேடிக்கை!"

—என்று வெம்பிய மனத்தோடு கராச்சி தீர்மானத்திற்கும் காந்தியாருக்கும் நேர்ந்துவிட்ட அவமானத்தைத் தாங்கமாட்டாமல் கண்ணீர் விட்டுக் கதறினார்கள், உண்மையிலேயே உலக ஆச்சரியங்களுள் ஒன்றாகத் திகழுகிற ஒரு சில காந்தி சீடர்கள்!

—ஆனால் உண்மை அதுவல்ல!

மந்திரிகள் சம்பளத்தைக் குறைத்துக்கொள்ள வேண்டுமென்கிற தீர்மானம் காங்கிரஸ் கமிட்டியிலே தோற்றிருக்கிறது!

ஆமாம்; உண்மைதான்! ஆயிரம் ரூபாய்தான் அதிக பட்சம் சம்பளம் வாங்க வேண்டுமென்று 36-பேர் ஆதரித்து ஓட்டளித்திருக்கின்றனர்!

அது கூடாதென்று கராச்சி தீர்மானத்தையும், காந்தியாரின் எண்ணத்தையும் எதிர்த்து ஓட்டளித்தவர்கள் முப்பத்தி மூன்றே பேர்கள்தான்!

—ஆமாம்; மூன்று ஓட்டுகள் 'மெஜாரிட்டி'யில் சம்பளக் குறைப்புத் தீர்மானம் நிறைவேறியிருக்கிறது!

—இந்த உண்மைகளை கமிட்டியில் கலந்து கொண்ட இரு முக்கிய காங்கிரஸ் பிரமுகர்கள் சொன்னதாக தோழர் எச். வி. காமத் பம்பாயிலிருந்து வெளிவரும் 'கரண்ட்' பத்திரிகையில் எழுதியிருக்கிறார்!

—இருந்தாலும் இந்த உண்மை மக்கள் மன்றத்திற்கு மறைக்கப்பட்டு விட்டது! காகிதத் திரைக்குள்ளேயே ஜனநாயகம் கழுத்தை நெறித்துக் கொலை செய்யப்பட்டுவிட்டது!

ஆட்சி பீடத்திற்கு வந்த பிறகுதான் ஜனநாயகத்தைக் கொலை செய்ய வேண்டுமென்பதில்லை. அதற்கு முன்னதாகவே காந்தியார் வளர்த்த காங்கிரஸ், திருப்பூர் குமரன் போன்ற தியாகிகளின் ரத்தத்தை நீராக உறிஞ்சி உயர்ந்த காங்கிரஸ், இன்று தனது அங்கத்தினர்களுக்கு எப்படி ஜனநாயகத்தை — பெருவாரியானவர்களின் அபிப்பிராயத்தை— அடக்கி ஒடுக்கி வெளிக்குத் தெரியாமல் ஆக்குவது என்பதற்கு டெல்லி மாநகரத்திலே ஒத்திகை நடத்திருக்கிறது!

'மக்களுக்கு இன்னின்ன முறையிலே சேவை செய்ய வேண்டும்; இப்படியிப்படியெல்லாம் பாடுபடவேண்டும்'—என்று கமிட்டி உறுப்பினர்களுக்குத் திட்டம் வகுத்துக் கொடுத்து பணி புரிவதற்குப் பறந்து செல்—என்று உபதேசிக்க வேண்டிய காங்கிரஸ் இன்று பெருவாரியானவரின் எண்ணப் பிரதிபலிப்பாக வெற்றி பெற்ற ஒரு தீர்மானத்தை வெளிக்குத் தெரியாமல் அதற்குக் காகிதத் திரையிட்டு மூடி மறைத்திருக்கிறது!

அதுமட்டுமல்ல!

அன்றைய தினம் பண்டித நேருவின் சொற்பொழிவினைப் படித்த அனைவரும்கூட இது எந்த அளவுக்கு உண்மை என்பதை உணர்ந்திருக்க முடியும்.

பண்டிதர்தான் காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் என்கிற பதுமைகளை ஆட்டிப் படைக்கிற மாபெரும் பொம்மலாட்டக்காரர்.

மேற்சொன்ன தீர்மானம் வரும் நேரம் பண்டிதர் எழுந்து அதைக் கைவிடும்படிக் கேட்டிருந்தாலே போதும்; தீர்மானம் கொண்டுவந்தவர் மௌனமாகி விடுவார்.

ஆனால் மாறாக பண்டிதர் மிகவும் 'உருக்கமான' பிரசங்கமொன்றை நிகழ்த்தியிருக்கிறார்.

யாருக்கும் தேவையில்லாத சொந்தக் குடும்பத்தின் கணக்கு விபரங்களை எடுத்து விளக்கியிருக்கிறார்.

"எனக்கே சம்பளம் போதவில்லை. நான் எழுதிய புத்தகங்களைப் பொதுமக்கள்

✲ 10-ம் பக்கம் பார்க்க

ஜூலை-7 ஞாயிறு

பாராளுமன்ற உறுப்பினர்களிடம் முறையிடும் நாள்

இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் வாழும் ஊர்களைச் சார்ந்த தி. மு. க. கிளைத் தோழர்களும், ஆதரவாளர்களும், 7-7-57 ஞாயிற்றுக்கிழமையைப் பாராளுமன்ற உறுப்பினரிடம் புதிய வரி விதிப்புப்பற்றி முறையிடும் நாளாகக் கொண்டு, அன்று அங்கந்தப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கும் ஊர்களில் பொதுமக்களுடன் ஊர்வலமாகப் பாராளுமன்ற உறுப்பினர் இருக்கும் இல்லத்திற்குச் சென்று, முறையீட்டின் நகலை அவரிடம் கொடுத்துவிட்டு, உடன் பொதுக்கூட்டத்தில் தீர்மானத்தை நிறைவேற்றி விளக்குமாறு வேண்டிக் கொள்கிறோம். பாராளுமன்ற உறுப்பினர் இல்லத்திலோ அல்லது ஊரிலோ இல்லாவிட்டால் அவர்கள் இல்லத்திலுள்ள வேறு முக்கியமானவரிடம் முறையீட்டின் நகலைக் கொடுத்து உரியவரிடம் சேர்ப்பிக்குமாறு கூறக் கேட்டுக் கொள்கிறோம்.

இந்திய அரசியலார் விதித்திருக்கும் புதியவரிகளையும் கட்டண உயர்வுகளையும் பொதுமக்கள் விரும்பவில்லை—எதிர்க்கிறார்கள் என்பதையும், பாராளுமன்றம் சென்றுள்ள உறுப்பினர்கள் அவற்றை எதிர்த்துப் பாராளுமன்றத்தில் போராடவும் வாக்களிக்கவும் வேண்டும் என்று பொதுமக்கள் விரும்புகிறார்கள் என்பதையும் பொதுக்கூட்டத்தில் தீர்மானமாக நிறைவேற்றவும்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கும் ஊரில் மட்டும் இந்த ஏற்பாடுகளைச் செய்தால் போதும்.

ஊர்வலத்தின் மூலம் முறையிட வருவதை முன் கூட்டியே அந்தந்தப் பாராளுமன்ற உறுப்பினருக்குப் பணிவன்போடு தெரிவித்து விடவும்.

21—6—57
'அறிவகம்'
சென்னை-13

இரா. நெடுஞ்செழியன்
போதச் செயலாளர், தி. மு. க.

வெள்ளி 5—7—57 சென்னை

பட்ஜெட்!

நாம் பெரும்பாலும் எஞ்சியுள்ள தொகைக்கு மத்திய அரசாங்கத்தையே நம்பியிருக்க வேண்டியிருக்கிறது. ஆனால் இந்த உதவி போதிய அளவில் கிடைக்கும் என்ற உறுதி இன்னும் கிடைக்கவில்லை. ஆகையால் கனம் அங்கத்தினர்கள் நமதுடைய மூலதனச் செலவிற்கு வேண்டிய நிதி முழுவதும் கிடைக்குமென்ற உறுதி இல்லாத நிலை இருப்பதைக் கவனிக்க வேண்டும்.

—என்கிற குறிப்புரையுடன் நிதியமைச்சர் சுப்ரமணியம் இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை அறிவித்திருக்கிறார்!

மாநில அரசாங்கம் எந்த அளவுக்கு மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில்—அதிகாரத்தில்—ஆக்ரமிப்பில் இருந்து வருகிறது என்பதைத் தெள்ளத் தெளிய அறிவிப்பதாய் இருக்கிறது சுப்ரமணியனார் கொண்டு வந்திருக்கும் இந்த வரவு செலவுத் திட்டம்!

ஆட்சி என்னும் குதிரையின் லகானைப் பிடித்துக் கொண்டிருப்பது டெல்லி அரசாங்கம்!

அந்தக் குதிரையைத் தேய்த்துக் குளிப்பாட்டி; சொட்டடியில் கட்டும் எடுபிடி வேலையைத்தான் சென்னை அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது!

அறிஞர் அண்ணா அவர்கள் அழகாக 'ஹோம் லண்ட்' ஆங்கில இதழில் எழுதியிருக்கிறார்கள்:

> சென்னை அரசாங்கம் தயாரித்திருக்கிற பட்ஜெட்டானது எட்டியிருக்கிற பெரிய கம்பெனியின் 'பிராஞ்ச் ஆபீஸ்' தயாரித்திருக்கிற வரவு செலவுத் திட்டத்தைப் போல் இருக்கிறது!
>
> ஆமாம்; பிராஞ்ச் ஆபீஸ் தன்னால் கட்டுப்படுத்த முடியாத விவகாரங்களைப்பற்றி எந்த முடிவும் எடுக்க முடியாது. தலைமை ஆபீஸ் குறிப்பிட்டிருக்கிற வரம்புக்குக் கட்டுப்பட்டுத்தான் அவர்கள் இயங்க வேண்டும்; இயங்க முடியும்!

—அதே முறையில்தான் சுப்ரமணியனாரின் திட்டமும் இருக்கிறது!

> இந்தியாவில் உள்ளமைய இருக்கும் நான்கு தொழில் நுணுக்கக் கல்வி நிலையங்களுள் ஒன்றை இந்த மாநிலத்தில் அமைக்கும்படிக் கேட்டிருக்கிறோம். அதற்கு மத்திய அரசாங்கமும் சம்மதித்துவிடும் என்று எதிர் பார்க்கிறோம்.

—இதுபோன்ற பல 'ஹேஷ்யங்களை' அடிப்படையாகக்கொண்டு மத்திய அரசாங்கத்திடம் மண்டியிடும் மனப்போக்கைப் பிரதிபலிக்கிறது, சென்னை 'பிராஞ்ச் மேனேஜர்' தயாரித்திருக்கிற இந்த 'பட்ஜெட்'!

ஆனால் அதே நேரம் ஏமாற்றங்கள் பல இதனால் ஏற்படாமலும் இல்லை

ஒரு சட்ட விற்பனை வரியை அமலாக்கும்படி இந்த மாநிலத்து வியாபாரப் பெருங்குடி மக்களும், பொது மக்களும் பன்முறை-சந்தர்ப்பம் நேரும்போதெல்லாம்—வற்புறுத்தி வந்திருக்கிறார்கள்!

ஆனால் எல்லோர் நலனிலும் நெருப்பை அள்ளிக் கொட்டும் பல கட்ட விற்பனை வரியை ஒழித்துக்கட்டாத இந்த அரசாங்கம் விற்பனை வரியை உயர்த்தவும் முடிவு செய்திருக்கிறது.

அதாவது இனிமேல் விற்பனை வரியை 1 9-16 சத வீதத்திலிருந்து 2 சத வீதமாக உயர்த்தியிருக்கிறார்கள்! இதனால் அரசாங்கத்திற்குக் குறைந்தது ஒரு கோடியே எழுபது லட்சம் கிடைப்பதற்கு வாய்ப்பிருக்கிறதாம்.

—ஒரு சட்ட விற்பனை வரி கேட்டு; அந்த 'வரப் பிரசாதத்தைப்' பெறலாம் என்று ஏங்கி நிற்கும் ஏழைப் பொது மக்களுக்கும், வியாபாரிகளுக்கும் காங்கிரஸ் அரசாங்கம் தந்திருக்கிற பரிசு இந்த விற்பனை வரி உயர்வுதான்!

—"பார்த்தீர்களா, எமது திறமையை!...தோட்டக் காடுகள்மீது உபரி வரிபோட்டிருக்கிறேன். இதைத் தவிர நான் வேறு வரிகள் விதிக்கவில்லையே!"

—என்று ஒருபுறம் இப்போது நிதியமைச்சரும் அவரது சகாக்களும்; அதேபோல மறுபுறம் பொதுமக்களும் மகிழ்ந்திடும் நிலையினில் இல்லை.

—ஏனெனில் இந்த சென்னைக் 'கொள்ளைக்காரருக்கு' முன்பாகவே டெல்லியிருந்து வந்த 'பாக்சாத் திருடர்' ஏழை எளியவர்கள் பலநாள் பாடுபட்டுச் சேர்த்து வைத்திருந்த பொருள்களை அனைத்தையும் ஒன்று விடாமல் எடுத்துச் சென்று விட்டார்.

பாவம்; 'பாக்சாத் திருடர்' வருகையில் இந்த 'உள்ளூர்த் திருடருக்கு' வருமானம் குறைந்து விட்டது வருந்தத்தக்க செய்திதான்! ***



பண்டிதர் வெளிநாடு சென்றுவிட்டார். ஆட்சி வண்டியின் லகான் யாரிடமிருக்கிறது? அதைத்தான் இந்தக் கேலிச் சித்திரம் சித்தரிக்கிறது.

ஹங்கேரியின் தேசிய எழுச்சி-
ஐ. நா. கமிட்டியின் படப்பிடிப்பு!

ஹங்கேரியில் நடந்தது மாபெரும் தேசிய எழுச்சிதான் என்பது உண்மையே!

அந்த 'விடுதலை' வீரர்களில் பெரும்பாலோர் பெண்களும் குழந்தைகளும் என்பது உண்மையே!

ரஷ்யா ஆக்ரமிப்பு என்னும் குற்றத்தைச் செய்திருப்பது என்பதும்; விடுதலையை விரும்பிக் கேட்டு வற்புறுத்திய நிராயுதபாணிகளான மக்கள்மீது போர் தொடுத்திருக்கிறது என்பதும் உண்மையே!

அந்த ஹங்கேரிய எழுச்சி ஹங்கேரியிலுள்ள பிற்போக்குவாதிகளால் தூண்டிவிடப் பட்டது என்பதும்; மேற்கத்திய ஏகாதிபத்திய நாடுகளிலிருந்து உதவி பெற்றது என்பதும் உண்மையல்ல!

—இந்த முக்கிய முடிவுகளை உலகுக்கு அறிவிக்கும் வகையில் ஹங்கேரி விவகாரத்தின் உள் நடப்புகளை ஆராயப் புகுந்த பிரத்யேகக் கமிட்டி தனது அறிக்கையினை வெளியிட்டிருக்கிறது!

ஐ. நா. கமிட்டியை ஹங்கேரிக்குள்ளே நுழைந்து விசாரணை செய்ய அனுமதிக்க மறுத்து விட்டது, அந்தநாட்டு அரசாங்கம்!

காதர்

'டேப் ரிக்கார்டிங்' பிரதமர்...

ஆனால் இந்த விடுதலைப் போராட்டக் காலத்தில் எவ்வளவோ ஆயிரக் கணக்கானவர்கள் ஹங்கேரியைவிட்டு— உயிருக்குப் பயந்து ஓடி வந்திருக்கிறார்களே!

அப்படி உயிர் தப்பி ஓடிவந்த அகதிகளின் தொகை மட்டும் 1,93,000 பேர்! அவர்களில் குறிப்பிடத் தக்கவர்களைப் பேட்டி கண்டு ஹங்கேரிப் போராட்டத்தைப் பற்றிய காரணங்களையும், விளக்கங்களையும் தொகுத்துக் கொடுத்திருக்கிறது ஐ. நா. கமிட்டி!

ஹங்கேரி மக்களது இந்த தேசியப் போராட்டம் வழக்கம்போல் உலகத்தின் வேறெந்த நாடுகளின் தேசியப் போராட்டங்களைப் போலவே மாணவர்களுடைய ஆதரவையும்; இளைஞர்களது ஆதரவையும் ஒருமிக்கப் பெற்றிருக்கிறது!

சீனத்தின் விடுதலைக் கொடியை உயர்த்திப் பிடித்து நாடெங்கும்—சந்து பொந்துகளெங்கும்—புரட்சியின் தீப்பொறிகளைப் பறக்க விட்டவர்கள், மாணவர்கள்தான்!

அதே மாணவர்கள்தான் ஹங்கேரியிலும் விடுதலை கீதத்தைச் சுருதி கூட்டிப் பாடியிருக்கிறார்கள்!

சென்ற அக்டோபர் 20-ம் தேதி, புடாபெஸ்ட் மாணவர்களும் வீடு கட்டும் தொழிலைச் சார்ந்தவர்களும், புடாபெஸ்ட் நகரத்து தொழில் நுணுக்கப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்தவர்களும் தங்களுடைய பதினாறு கோரிக்கைகளை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டுமென்று மாபெரும் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினார்கள்!

ஹங்கேரியிலிருக்கும் அன்னிய துருப்புகளான சோவியத் துருப்புக்கள் வெளியேற்றப்—

இம்ரே நாகியின் தலைமையில் நல்ல அரசாங்கத்தை அமைப்பது—

சுதந்தரமான தேர்தல்—

அபிப்பிராயம் வெளியிடும் உரிமை—

அரசியல் கட்சிகள் திரும்பவும் அமைக்கப் படுவதற்கான சூழ்நிலைகளை ஏற்படுத்துதல்—

தொழிலாளர்கள், குடியானவர்கள் — ஆகியோரின் நிலைமைகளை முன்னேற்றுதல்—

—இவை போன்றவைகள்தான் அந்த மாணவர்கள் நிறைவேற்ற வேண்டுமென்று குறிப்பிட்ட கோரிக்கைகளாகும்!

மறுநாளும் இது போன்றதொரு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆனால் இதில் மூன்று லட்சம் பொது மக்களும் கலந்து கொண்டார்கள்!

மாணவர்கள் நிரம்பிய இன்னொரு ஊர்வலம் தங்களது 16 கோரிக்கைகளையும் வானொலியில் ஒலிபரப்ப வேண்டுமென்று வானொலி நிலையம் நோக்கிச் சென்றது அதில் ஒரு தூதுக் குழுவினர் மட்டும் நிலையத்திற்குள்ளே சென்றனர். மீதி அத்தனை பேரும் வெளியிலே காத்து நின்றனர்.

ஆனால் வதந்தி ஒன்று இன்னும் உலவுகிறது—பாதுகாப்பு போலீசார் அந்தத் தூதுக்குழுவில் ஒருவரைச் சுட்டுக் கொன்று விட்டார்கள்—என்று!

இதன் பிறகுதான் நெஞ்சு துணுக்குறும் சம்பவமொன்று நடைபெற்றது.

பாதுகாப்புப் போலீசார் வானொலி நிலையத்திற்கு வெளியிலே நின்றுகொண்டிருந்த பொதுமக்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினர். இந்த இடை நேரத்திலேதான் ஸ்டாலினது மாபெரும் சிலையும் குப்புறத் தள்ளப்பட்டிருக்கிறது.

—இதுவரை அமைதியாக நடைபெற்று வந்த பொது மக்களது ஆர்ப்பாட்டம் இந்தச் சம்பவத்திற்குப் பிறகுதான் பலாத்கார வடிவு பெற்றது!

பொது மக்கள் எவ்வாறு பலாத்காரத்தை நாடுமளவுக்குத் தூண்டப்பட்டார்கள்?

இதற்கும் ஒரு காரணமிருக்கிறது:

திடீரென்று வெள்ளை ஆம்புலன்ஸ் போட்டார்கள் செஞ்சிலுவைச் சின்னத்துடன் கூட்டத்திற்குள் நுழைந்தன.

அந்த ஆம்புலன்ஸ் வாகனத்திலிருந்து டாக்டர்களைப் போல வெள்ளை உடை தரித்தவர்கள் எறும்புபோல் சாரை சாரையாக இறங்கினார்கள்!

ஆனால் அவர்களெல்லாம் முதல் உதவி செய்வதற்காக வந்த டாக்டர்கள் அல்ல!

அவர்கள் அனைவரும் டாக்டரைப் போல் வெள்ளை உடை அணிந்து கொண்டிருந்த பாதுகாப்புப் போலீசார்கள்!

ஏ. வி. எச்—என்று அழைக்கப்படுகிற இந்தப் பாதுகாப்பு போலீசார் ஏற்கனவேயே தங்களது கொடுமையான அட்டகாசங்கள் மூலம் பொது மக்களது வெறுப்பிற்கும், சண்டனத்திற்கும் ஆளாகியிருப்பவர்கள்! பாவம்; அவர்கள் ஹங்கேரி நாட்டு மலபார் போலீஸ்' போலிருக்கிறது!

இந்த ஏ. வி. எச். போலீசார் தங்களை அடக்குவதற்காக டாக்டர் உடையில் ஆம்புலன்ஸ் கார்களில் வந்திறங்கியதும் பொது மக்களது ஆத்திரம் அளவு கடந்தது. அமைதி குலைந்தது.

முன்பே துப்பாக்கிப் பிரயோகத்திற்கு ஆளாகியிருந்தபோது மக்களுக்கும் போலீசாருக்கும் கைகலப்பு ஏற்பட்டது. அவர்களால் இதைச் சமாளிக்க முடியவில்லை.

உடனே அந்த இடத்திற்கு ஹங்கேரிய இராணுவம் வரவழைக்கப்பட்டது. ஆனால் அவர்களோ பொது மக்களோடு சேர்ந்து கொண்டார்கள்!

ஐ நா. அறிக்கை இப்படி வர்ணிக்கிறது:

போராட்டக்காரர்கள் வெளியிலிருந்து ஆயுதங்களைத் தருவித்துக்கொள்ளவில்லை. அவர்கள் தங்களுக்கு நண்பர்களாயுள்ள சிப்பாய்களிடமிருந்தும், போலீசிடமிருந்தும அல்லது அவர்களுக்குத்தெரிந்த இராணுவ முகாம்களிலிருந்தும் ஆயுதத் தொழிற்சாலைகளிடமிருந்தும் பெற்றுக் கொண்டார்கள்.

—இதற்கிடையிலேதான் சோவியத் இராணுவம் ஹங்கேரிக்குள்ளே நுழைந்தது!

ஆனால் பொதுமக்கள் விரும்பாத சோவியத் இராணுவம் வரவழைக்கப்பட்டதற்குத் தகுந்த காரணம் சொல்ல வேண்டுமல்லவா?



நாகி

துப்பாக்கி முனையில் பிரதமர்.

அதனால்தான் பொதுமக்களால் விரும்பப் படுகிற தலைவர் இம்ரே நாகி திடீரென்று ஒருநாள் அவரதுமருமகனுடன் ஓர் அறையிலே காவல் வைக்கப்பட்டார்.

அதே நேரம் இம்ரேநாகி பிரதம மந்திரியாக நியமிககப் பட்டதாக அறிவிப்பு முழங்கியது!

அது மட்டுமா? ஹங்கேரியின் நிலைமையைக் கட்டுப்படுத்த இம்ரே நாகிதான் சோவியத் நாட்டைத் துருப்புக்கள் அனுப்பிவைக்கும்படிக் கூறினார்-என்றும் செய்தி கிளப்பிவிடப்பட்டது!

✻ 9-ம் பக்கம் பார்க்க

அல்லி

[அக்பர் என்னும் பெயரைக்-கேட்டாலேயே இந்து-முகம்மதிய ஒற்றுமையை நிலை நாட்டிய முகலாயப் பேரரசன்தான் நினைவுக்கு வருகிறான். அவன் வேறு; நம் சிறுகதையின் தலைவன் வேறு. அவனோ பேரரசன்; இவன் இளவரசன். அவன் உமாயூனின் மகன்; இவனோ ஔரங்கசீபின் மகன். அவன் பதினைந்தாம் நூற்றாண்டினன்; மற்றவனோ தானைத் தலைவனாக மட்டுமிருந்து புகழ் மங்கிய வாழ்வினன். அக்பர் பேரரசனோ போரில் கைதியான அரசர்களிடமும் அன்பு செலுத்தி, அனைவர்க்கும் தோழனானான். பின்னவனோ பகைவரிடமும் அன்பு செலுத்தினானாயினும், அன்பர்களாலேயே ஓடஓட விரட்டியடிக்கப்பட்டான். ஆம்! இருவரும் முகலாயர்தான்; 'அக்பரே'தான்; இருவரிடையேயுள்ள வேறுபாடுகளும், 'இஞ்சிக்கும், சுக்குக்குமுள்ள வேறுபாடுகளே' என்பதுமோர் உண்மை மொழிதான்.]

அந்தப் பொய்கையின் அருகில்தான் பாசறையமைத்துப் படையிறக்கியிருந்தான், அக்பர். அல்லி அழகோவியமாகத் திகழ்ந்தாள். அவள் தனது தோழிகளோடு அப்பொய்கையில் நீராட வந்து கொண்டிருந்தாள். அவள் வழியில் பேசி வந்த குறும்புப் பேச்சுகள் வான் தொட்டு எதிரொலித்தன. அந்நங்கையர்கள் குளிக்கப் போவதை அறிந்தவனைப் போல, பகலவன் ஓடோடியும் போய் மேலை மலைக்குப் பின்னால் ஒளிந்து கொண்டான். அல்லியின் முகமதி கண்ட பொய்கையின் அல்லி அரும்புகள் 'நல்விருந்து கண்ட வேளாளன'து முகம்போல மலர்ந்தன. தாமரையும் அல்லியின் முகமதி கண்டு மதி வந்ததையும் அறியாமல் 'இறுமாந்துள்ளோமே' என்று நாணுவதுபோல, குவிந்து தொங்கியது. காதலி தன்னைக் கவர்ந்த காதலனது உள்ளக் கடலில் புகுந்து, உணர்ச்சிகளைக் கலக்குவதைப் போல, அவர்கள் நீரிலே குடைந்து குடைந்து விளையாடினர். பொய்கையிலிருந்து எழுந்த பேரார்வத்தால், அம்மாலைப் பொழுதினிலே ஆநிரைகளும், பறவைக் கூட்டங்களும் 'கடல் பொங்கி நிலத்துள் புகுகின்றதோ?' என ஐயுற்றுத் தத்தம் இருப்பிடம் நோக்கி விரைந்தன.

அல்லியின் அழகின்பால் மயங்கி, அவர்களது விளையாட்டில் குறுக்கிடாதவனைப்போல, அக்பரும் தன் வீரர்களை ஊதி அழைத்தான். அணி வகுக்கச் செய்து சுற்றிப் பார்த்தான். நீர் வேட்கையால் உந்தப்பட்டு, போர் வீரர்களுக்குப் பயிற்சியளிக்குமாறு துணைத் தலைவனைப் பணித்துவிட்டு, தனது நெருங்கிய தோழன் முகமது அலியோடு பொய்கை நோக்கி வந்தான். அப்போது குளித்துவிட்டு மீண்ட அல்லியைப் பேரழகன் அக்பர் கண்டான்; அவளும் அவனை நோக்கினாள். ஓரிமைப்பிலே அல்லி அக்பரின் உள்ளத்திரையில் பதிந்தாள். அல்லியின் உள்ளமும் கூட பேருணர்ச்சியால் பூரித்த அந்த ஒரே கணத்தில் அவர்களிருவரது உள்ளங்களும் அளவளாவின!

* * *

"இளவரசே!" என்று விளித்து நின்றான், அக்பரின் கூடாரவாயிலிலே துர்க்காதாசு. முகலாயரின் கொடுமைக்கஞ்சாமையை அவனது முகத்திரையிலே பதிந்திருந்த கருமையே காட்டிற்று. மண்டியிட்டுத் தொழுது கொண்டிருந்த அக்பர், எழுந்து ஓடோடியும் சென்று துர்க்காதாசை அழைத்து வந்து இரத்தினக் கம்பளத்தின் மீது உட்காரவைத்தான்.

கீரன்

"பருகுங்கள்!" என்று துர்க்காதாசுக்கு ஒரு கோப்பையிலே பழச்சாற்றை ஊற்றித் தந்தான். பனிக்கட்டி பற்றிய குழந்தையின் கைகள்போல துர்க்காதாசின் கைகள் நடுங்கின, பழச்சாறு ததும்பி கோப்பையிலிருந்து வழிந்தது.

"அஞ்சாதீர்கள்; குடியுங்கள்!" என்று சொல்லிவிட்டு, அக்பருக்கொரு கோப்பையிலே பழச்சாறு தந்தான், முகமது அலி. தானுமொரு கோப்பை பருகினான். துர்க்காதாசு தயங்கிக் கொண்டே மெல்லக் குடித்தான். சிறிது நேரம் அமைதி நிலவியது. அக்பர் கண்களாலேயே முகமது அலிக்கு ஏதோ சொன்னான்.

முகமது அலி, "உமது மகள் அல்லியை அக்பர் காதலிப்பது தங்களுக்குத் தெரியுமென நினைக்கின்றேன். அக்பர் அல்லியை மணமுடித்துக்கொள்ள தங்களது இசைவை கேட்கவே அழைத்துள்ளார்." என்று, துர்க்காதாசு அழைக்கப்பட்டதன் காரணத்தைத் தெளிவுபடுத்தினான்.

துர்க்காதாசின் முகத்தில் மகிழ்ச்சிக் கோடுகள் மின்னி மறைந்தன. அவன் முகத்திரையிலே அச்சத்தின் சாயல் தாண்டவமாடியது.

பிறகு, "தங்களை மருமகனாக ஏற்கத் தடையில்லை. பேரரசன் அக்பரது அன்பொளியைக் கண்டு வியப்புறுகிறேன். இன வேறுபாடுகளைக் கலப்பு மணத்தாலன்றோ ஒழித்தான்? தாங்களும் அதையேயன்றோ கடைப் பிடிக்கின்றீர்கள்? இவ்வளவு ஆண்டுகளும் மாற்றாரிடமும் அன்பு காட்டி தந்தையின் பகைக்குமல்லவா ஆளானீர்கள்! 'இபாதத்கானா' எனும் வழிபாட்டரங்கிலேயும், அரசவையிலும் பல இனங்களைச் சேர்ந்த அறிஞர்களின் நல்லுரைகளையும் ஒலிக்கச் செய்து, இன்புற்று, அவற்றின்படியன்றோ அரசோச்சினான்! நாடு, இனம் முதலிய வேறுபாடுகளை நீக்கி, கட்சி மனப்பான்மையை விலக்கி, அரசாண்டதாலல்லவா அவனது பொற்காலத்திலே குடிகளின் உள்ளத்திலே தெளிந்த அன்பருவி பொங்கிப் பெருக்கெடுத்தது? கட்சி சார்பற்ற அரசு நிலவும் போதுதான் ஒற்றுமை நிலவும் என்பதை வரலாற்றிலே முழக்கி, அழியாத் தன்மையை அடைந்துள்ளவனது மரபில் வந்த, அதனையே அடைய விரும்பும் தங்களுக்கு அல்லியையளிக்கும் பேறு பெற்றேனே! அல்லி தங்களுக்காகவே யல்லவா மலர்ந்துள்ளாள்? ஆனால்..." என ஒரு நீண்ட சொற்பொழிவை ஆற்றிவிட்டு, ஏதோ சொல்லத் தயங்கினான்.

தேன் சொட்டும் பலாச்சுளை பாதி தின்கின்ற போதினிலே தட்டிப் பறிக்கப்பட்டால் தின்று கொண்டிருந்தவன் வெறுப்பும், கோபமும், இழந்ததைப் பெற அணையா ஆவலும் கொள்ளுதலைப் போன்று அக்பர் திகைப்புற்றான். அவன் பொறுமையின்றி, கோபத்தோடு "ஆனால் என்ன?......" என்று கேட்டுவிட்டுத் தொடர்ந்து "என் காதல் பாலிலே தீந்தேன் வார்த்து, நல்லரசனாகத் திகழ்வதற்கான முறையையுங் கூறி, மனவெழுச்சி கொள்ளச் செய்தீர்கள். அப்படியிருக்க என்னிடம் தாங்கள் நினைப்பதைக் கூறவும் தயங்கலாமா?" எனக் கேட்டு விட்டு, பேராவலோடு துர்க்காதாசைப் பார்த்தான்.

அக்பரின் அன்பு மொழிகளைச் செவியுற்ற துர்க்காதாசு மகிழ்ந்தான். அவன் அக்பரை நோக்கி, "உமது தந்தை ஔரங்கசீபுக்கு 'இந்துக்கள்' எனும் சொல்லே எட்டிக்காய்போலக் கசக்குமே! அவர் அல்லியைத் தமது மருமகளாக ஏற்பாரா? தங்கள் உயிருக்கேகூட, அல்லியின் திருமணம் ஒருவேளை உலைவைக்குமே! தங்களன்பின் அரசு நிலவு முன்னேபோ தங்களது வாழ்வு முடியுமோவென்றும், என் மகளால் அக்பருக்குக் கொடுமை நிகழக்கூடாதே என்றுந்தான் தயங்குகின்றேன்" என்று ஒரு நல்லமைச்சனைப்போல, எண்ணியதை அஞ்சாமல் கூறினான்.

கூறியதைக்கேட்டு அக்பரின் முகம் அன்றலர்ந்த மலர் போலப் பொலிவுற்றது. ஆழ்ந்த சிந்தனையின் வரிகள் முகத்தில் படர்ந்தன.

"எங்கள் கருத்தாகிய செம்பொன் மலருக்கு தங்கள்சொற்கள் மணமூட்டின. ஔரங்கசீப், உதயபுரிமன்னன் இராசாசிங்கை வீழ்த்தி வாகை சூடுவதற்குத்தான் எங்களைப் பெரும் படையோடு அனுப்பினார். ஆனால், நாங்களோ இந்து—முகம்மதிய ஒற்றுமைக்குத் தடையாயுள்ள ஔரங்கசீபைக் கொன்று, அமைதியை நிலைநாட்டச் செய்யவேண்டிய ஏற்பாடுகளை முடிக்கவே இங்கு தங்கியுள்ளோம். இளவரசரது ஆணையை நிறைவேற்ற இராசாசிங்கும், அசித சிங்கும் காத்துக் கொண்டுள்ளனர். டில்லியரசு

✻ 8-ம் பக்கம் பார்க்க

காட்டூர் ஊராண்மைக் கழக புதிய பள்ளி கட்டிடத் திறப்பு விழா!

7—7—57 ஞாயிறு மாலை 5 மணிக்கு

காட்டூரில்

குடந்தை திரு. ஆரோக்கியசாமி அவர்கள் தலைமையில்

நடைபெறும்.

அறிஞர் அண்ணா

அவர்கள்

பள்ளிக்கூடத்தைத் திறந்து வைப்பார்கள்.

அனைவரும் வந்து விழாவினைச் சிறப்பிக்க வேண்டும்.

கே. வி. ராமய்யா
நிதிக்குழுச் செயலாளர்,
ஊராண்மைக் கழகத் தலைவர்

மு. கருணாநிதி.
கட்டிட நிதிக்குழுத் தலைவர்

ஆரம்பம் அடாணா! முடிவு முகாரி!

அன்புள்ள பொன்முடி!

வரவு செலவுத் திட்ட அறிக்கையைப்பற்றி நான் சட்டசபையிலே பேசியதை எழுதச் சொல்லியிருந்தாய். இதோ, எழுதியிருக்கிறேன்; படித்துப் பார்:

★

1957—58-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை பதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்கள் இம்மன்றத்தில் வெளியிட்டு ஆதரவு கோரியிருக்கிறார்கள். அது பற்றி என் கருத்துக்களைக் கூற கடமைப்பட்டிருக்கிறேன். அறிக்கையை ஆதரித்துப் பேசிய ஆளுங் கட்சி அங்கத்தினர்கள் எதிர்க் கட்சியினராகிய நாங்கள் எதை எடுத்தாலும் குற்றம் சொல்லுகிறோம்; கால் பட்டாலும் குற்றம்; கை பட்டாலும் குற்றமென்கிறோம்—எனக் குறிப்பிட்டார்கள். கால் பட்டால் குற்றமா இல்லையா என்பது படுகிற காலைப் பொறுத்திருக்கிறது. குழந்தையின் பாதம் படுவதை குற்றமென யாரும் கூறிடார். குஞ்சர பாதம் (யானைக் கால்) படுவதை அனுமதிக்க முடியுமா என்ன? எதிர்க் கட்சிகள் குறை கூறுகிறார்கள் எனக் குற்றம் சாட்டி 'அடாணா' ராகத்தில் பேச்சை ஆரம்பித்தவர்கள்—அவர்களும் தங்கள் குறைகளை நிறையக் கூறி 'முகாரி'யில் முடித்தார்களே தவிர யாரும் 'மோகன' ராகத்தில் முடிக்கவில்லை.

புதிய வரிகள் போடாததால் எதிர்க் கட்சியினர் ஏமாற்றமடைந்து சோர்ந்து விட்டார்கள் என்றும் பெருமை பேசப்பட்டது. இது எவ்வாறு இருக்கிறதெனில் "நேற்றிரவு ஒரு வீட்டுக்குத் திருடப் போவதாகத் திட்டமிட்டேன். வீட்டுக்காரப் பயல் இரவெல்லாம், விழித்திருந்தான். நான் திருடப்போகவில்லை. வீட்டுக்காரன் சரியானபடி ஏமாந்தான்" என்று திருடன் பெருமையடித்துக் கொள்வதுபோல இருக்கிறது.

நிதி மந்திரி அவர்கள் பற்றாக் குறைத் திட்டத்தை அறிவித்து "சென்ற ஆண்டு ஐந்தாண்டுத் திட்டத்துக்காகப் பெரும் அளவில் செலவு செய்ய நினைத்திருந்தோம்; வசதி வாய்ப்புக்கள், இன்ன பிற நிலைகள் சரியாக அமையாததால் 29 கோடி ரூபாய் குறைந்த செலவில்தான் குறைந்த திட்டங்களைக் காண முடிந்தது— அது போலவே இந்த ஆண்டும் ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றுவதில் நிலைமை மோசமாகவே இருக்கிறது. சில முக்கியமல்லாத திட்டங்களை ஒத்திப்போடவும் வேண்டியிருக்கும். ஆனால் ஒன்று; புது வரிகள் இல்லை—பழைய வரியில்தான் மாறுதல்' என அறிவிக்கிறது அமைச்சரின் வரவு செலவுத் திட்டம்.

வெளியூர் சென்ற கணவன் என்ன நிலையில் வருவானோ என எதிர்பார்த்துக் கதவோரத்தில் நிற்கும் காரிகையிடம் "உனக்கு மத்தாப்பு சேலை, மரகதமணி மல்லிகைப்பூமாலை வாங்கி வரவில்லை— அது மட்டுமல்ல; உன்னை இனிமேல் அடிப்பதற்கு புதிய கம்பு வாங்காமல் தற்காலிகமாக பழைய கம்பையே பழுதுபார்த்து வந்திருக்கிறேன்' எனச் சொன்னால் மகிழ்ச்சியா பிறக்கும் மனைவிக்கு! இந்தக் கதை போலத்தான் அமைந்திருக்கிறது நிதி நிலை அறிக்கையில் காணப்படும் திட்டமும்; பழைய வரி மாறுதலும்!

கிராமக் கர்ணம், முனிசீப், பணியாளர்களுக்கு 'கிராக்கிப் படி'யை சிறிது உயர்த்த முன்வந்திருப்பது பாராட்டக் கூடியது என்றாலும், அதுவும் அழுத குழந்தைக்கு அழுகல் வாழைப் பழத்தை அளித்தது போன்ற அதிருப்தியோடுதான் வரவேற்கப்படும்.

முந்திரி சாகுபடிக்கு நாலு லட்ச ரூபாய் திட்டத்தில் ஒதுக்கி விட்டதால் தென்னாடு புறக்கணிக்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டை சமாளித்து விட்டதாக நிதி மந்திரி கருதுவாரானால் அதற்காக மிக மிக வருந்துகிறேன். 'சிந்திரி, முந்திரி' எனத் தேர்தல் நேரத்தில் நாங்கள் பேசியதை கனம் மந்திரி இங்கே சுட்டிக் காட்டினார். "சிந்திரித் தொழில் சிறக்கிறது வடக்கே—முந்திரித் தொழிலும் சிதைகிறது தெற்கே!" என ஒலித்தன எங்கள் சுவரொட்டிகள். இந்தச் சுவரொட்டிகளால் என்ன ஆகும் என அங்கலாய்த்தவர்களுக்குப் பதில் அளிக்கும் வகையிலே முந்திரித் தொழிலுக்கு நாலு லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது எங்களைத் திருப்தி செய்யக்கூடியது என நிதிமந்திரி குறிப்பிடடார்கள். முந்திரித்தொழிலும் சிதைகிறது என்பதில் உள்ள "உம்" பெரிய தொழில்கள் மட்டுமல்ல; சிறிய தொழில்களும் சீரழிகின்றன என்பதையே சுட்டிக் காட்டும்!

திட்டங்கள், திட்டங்கள் என எதற்கெடுத்தாலும் பேசப்பட்டு அதற்கென எல்லாத் துறைகளிலும் வரி வசூலிக்கப்பட்டு மத்திய சர்க்காரின் பிடியிலே மக்கள் மென்னி நெரிக்கப்பட்டு வாடுகிற நேரத்தில், 'நாமும் வரி போட்டால் முற்போக்குக் கட்சிகளின் எதிர்ப்பு பலமாகுமே' என மிரண்டுதானோ என்னவோ மாநில சர்க்கார் தற்காலிகமாக வரி போடுவதில்லை யென கூறியிருக்கிறது. ஆயினும் ஒன்றைக் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை.

வள்ளுவர் குறளில்,

"வேலொடு நின்றான் இடு
என்றது போலும்
கோலொடு நின்றான் இரவு"

மக்களிடம் நிர்ப்பந்தம் செய்து பொருளைப் பெறுகிற கோலுடைய அரசன் வேலோடு நின்று பயணம் நடத்துகிற மக்களிடம் கொள்ளையடிக்கிற கொடியவனுக்கு ஒப்பாவான் என்பது கருத்து இப்போது ஆங்கிலேயர் காலத்தில் திட்டமிடப்பட்டு, இரண்டாம் உலகப் போரினால் நிறுத்திவைக்கப்பட்டு, அணமையில் திறக்கப்பட்ட கொள்ளிடம் பாலத்தில் வசூலிக்கப்படும் சுங்கவரி "வேலொடு நின்றான் இடு என்றது போலும்" என்ற குறளைத்தான் நினைவு படுத்துகிறது என்பேன்.

பொதுவாக, வரவு செலவுத் திட்டத்தில், ஆரத்தின் இடையே இழைந்தோடும் நூலைப்போல அறிக்கை முழுதும் காணப்படும் உண்மை ஒன்றுண்டு. அதுதான் மாநில சர்க்கார் எல்லாவற்றுக்கும் மத்திய சர்க்காரை எதிர்பார்க்கிறது—என்பதாகும் எதையும் அறுதியிட்டு உறுதியாகக் கூற முடியாமல் தேங்கித் தேங்கி வரும் அமைச்சரின் வாசகங்களைக் காண்போம்.

"தேசியத் தொழில் அபிவிருத்திக் கார்ப்பரேஷன் சேலத்தில் உள்ள மூலக் கனிப்பொருள்களைக் கொண்டு இரும்பு உருக்கும் ஒரு தொழிற்சாலையை நிறுவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது!"

★★ "எதிர்பார்க்கப்படுகிறது!' என்ற ஏக்கம் கலந்த வாசகம் வெளிப்படுவானேன்? வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது—அதனால்தான்!

"மேட்டூரில் காகித ஆலை அமைக்கும் விஷயம் ஆலோசனையில் இருந்து வருகிறது!"

★★ அமைக்கப்படாமல், ஆலோசனையிலேயே இருப்பானேன்? வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது—அதனால்தான்!

"செயற்கை பட்டு நூல் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை பவானி சாகரில் நிறுவப்படலாம்!"

★★ நிறுவப்படும் என்ற "டும்" வருவதற்குப் பதில் "படலாம்" என்று "லாம்" வருவானேன்? வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது—அதனால்தான்

"பிராட் கேஜ் பெட்டிகளுக்கென தொழிற்சாலை ஒன்று நிறுவப்படலாம்!"

"டி. ஐ. சைக்கிள் ஸ்தாபனம் சைக்கிள் உற்பத்தியைப் பெருக்க, அதன் அளவை அதிகரிக்க வேண்டுமென்று இந்த அரசாங்கம் யோசனை கூறியுள்ளது. அது இப்போது பரிசீலனையில் இருக்கிறது!"

"உயர்தரத் தொழில் கல்வி நிலையம் ஒன்றை சென்னை நகரில் கிண்டிப் பகுதியில்

: புதையல் :

திரைக் கதை வசனப் புத்தகம்

விலை 8 அணா : : கழிவு 40 சத வீதம்

[தேவையான பிரதிகளுக்கு கழிவு நீக்கி முன்பணம் அனுப்பவும். அல்லது வி. பி. யில் அனுப்ப வேண்டுமென்றாலும் தெரிவிக்கவும்.]

எம். கே. பதிப்பகம்,

த. பெ. 712. : : சென்னை—6.

★ சிந்திரி - முந்திரி - மந்திரி! ★

அமைப்பதால் ஏற்படக் கூடிய பல்வேறு அனுகூலங்களை நாம் அழுத்தமாக எடுத்துக் கூறியுள்ளோம். சாதகமான முடிவு விரைவில் கிடைக்குமென எதிர்பார்க்கிறோம்!"

★★ —முடிவுகளை உண்டாக்கக் கூடிய முடிவுடை மூவேந்தர் பரம்பரை வடக்கு நோக்கி வரம் கேட்டு எதிர்பார்த்து நிற்கிறது, இப்போது!

திரு க. சந்தானம் அவர்களைத் தலைவராகக் கொண்ட நிதிக் கமிஷனிடம் மாநில அரசு முறையிட்டிருப்பதையும் அமைச்சர் அறிக்கை வேதனையோடு குறிப்பிடுகிறது.

"மத்திய வரி இனங்களில் நமக்கு அதிக விகிதம் கிடைக்க வேண்டிய நியாயத்தையும் விளக்கியுள்ளோம்!"

"நாம் கூறியுள்ள யோசனையில் அடங்கியுள்ள முறைகளையேனும் நிதிக் கமிஷன் ஒத்துக் கொள்ளும் என நம்புவோமாக!"

"நாம் பெரும்பாலும் எஞ்சியுள்ள தொகைக்கு மத்திய அரசாங்கத்தையே நம்பியிருக்க வேண்டியிருக்கிறது. ஆனால் இந்த உதவி போதிய அளவில் கிடைக்குமென்ற உறுதி இன்னும் கிடைக்கவில்லை. ஆயினும் சிக்கல்கள் எழும்போது அவைகளை எப்படியும் சமாளித்துக்கொள்வோம் என்ற உறுதியில் முன் செல்வோமாக!"

★★ —சமாளிப்போம் என்று நிதியமைச்சர் சங்கடத்துடன் கூறுகிறாரே தவிர, எதிர்த்துப் போராடி உரிமையைப் பெறுவோம் என்ற உத்வேகம் காணப்படவில்லை.

அஸ்ஸாம் மாகாணத்து எழுச்சி சென்னை மாநிலத்திற்கு இல்லாமல் போவானேன்? எண்ணெய்த் தொழிற்சாலை ஏகபாரதத்தில் எங்கிருந்தால் என்ன? பீகாரில்தான் இருந்து விட்டுப் போகட்டுமே என்ற பெருமனது (?) அஸ்ஸாமுக்கு வரவில்லை. வீறுபெற்று எழுந்து மந்திரிகள் ராஜினாமாக்களை வீசி எறியத் தயாராகி விட்டனர். தேபர் தேறுதல் கூறியும் அஸ்ஸாம் கொந்தளிப்பு அடங்கிய பாடில்லை. அஸ்ஸாம் அந்நிய நாடுமல்ல; கேரளத்தைப் போல கம்யூனிஸ்ட் மந்திரிகள் ஆளுகிற நாடுமல்ல; காங்கிரஸ் மந்திரிகளேதான் மத்திய சர்க்காரைத் துணிவுடன் எதிர்க்கிறார்கள். அந்தத் துணிவுடைமை இங்கே இல்லை.

"தூங்காமை கல்வி
துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலன் ஆள்பவர்க்கு!"

என்றார் வள்ளுவர். திருக்குறள் மலிவுப் பதிப்பு வெளியிடப்படும் இந்த சமயத்திலாவது குறள்வழி நடந்து நாடாள முனைய வேண்டும் நமது அரசினர் எனக் கூறி, வரவு செலவுத் திட்டத்தில் எனக்குள்ள அதிருப்தியைத் தெரிவித்து உரையை முடிக்கிறேன்!

* * *

வடக்கு நோக்கி வாய்பிளந்து வரம் கேட்கும் நிதி அமைச்சரின் பரிதாப நிலைமையை ஆதாரப்பூர்வமாக அவர் வாசகங்களிலிருந்தே நான் எடுத்துக் காட்டியது அமைச்சருக்கு ஆத்திரமூட்டத்தானே செய்யும்! வரவு செலவு பற்றி குறை சொல்லுங்கள் என்றால் வடக்கு தெற்கு பற்றிப் பேசுகிறார்களே என்று அங்கலாய்த்துக் கொண்டார். இது கொடுங்கோன்மை ஆட்சியல்ல என்று கோபங் கொப்பளிக்கக் கூறினார்.

தூத்துக்குடி, கல்லக்குடியிலே துப்பாக்கி ரவைகளால் நம்மவர் பலர் மேனியைத் துளைத்து, காலற்றவர்களாய், கபோதிகளாய் முடவர்களாய் பிணங்களாய்ப் பலரை ஆக்கிவிட்டு, மராட்டியத்திலே வேட்டு முழக்கம்—வேதனைக் குரல் என்ற நிலையை உருவாக்கிவிட்டு, நாகர்கள் மீது போர் தொடுத்து, அவர் தம் உரிமை முழக்கத்தை உருக் குலைக்கத் திட்டமிட்டுத் தினவெடுத்து நிற்கின்றவர்கள் கொடுங்கோலர்கள் அல்லவாம்—கூறுகிறார் அமைச்சர் பொன்முடி!

"வானத்தை வில்லாக வளைப்போம்" என்று வந்தவர்கள் வடக்கு தெற்கு பேசுகிறார்கள் —என்று கக்கன்ஜீ சபையிலே முழக்கமிட்டதைக் காண எனக்கு சிரிப்பு, பொங்கி விட்டது நண்பனே!

வானத்தை வில்லாக வளைக்க வந்தோமாம்; மணலைக் கயிறாகத் திரிக்கும் இந்த மகானுபாவர் கேலி புரிகிறார்.

ஆதி திராவிடர்கள் படுகின்ற அவதி பற்றி காங்கிரஸ், ஆதி திராவிட உறுப்பினர்களே பெரு முழக்கம் செய்தார்கள்!

'ஆண்டவனுக்கு உள்ள ஆஸ்திகளை எடுத்து நாட்டுக்கு நன்மை புரியுங்கள் என்று ஒரு தோழர் புதுக் குரல் கொடுத்தார், காங்கிரஸ் பக்கமிருந்து!

அதுபற்றியெல்லாம் தன் எண்ணத்தைத் தெரிவிக்க வகையற்று, எண்ணெய் கலந்த நடையிலே எதிர்க் கட்சியை எதிர்த்துப் 'பேசித் திருப்தி அடைந்தார்! பக்தவத்சலமும் பேசினார்! காமராசர் வழக்கம் போல்!

பிற, அடுத்தமடலில் விளக்கமாக எழுதுகிறேன்!

அன்புள்ள,
நண்பன்.

பழைய குருநாதர் பாடும் கீதம்!

சென்னை நிதி அமைச்சர் "வடக்கு; தெற்கு" என்ற பேச்சை எடுத்தாலே சீறி விழுகிறாரே; அவரது பழைய குருநாதர் ஆச்சாரியார் அவர்கள் தீட்டியுள்ள வாசகங்களை அவருக்கு சமர்ப்பிக்கிறோம். "அனுபவ சீலர்" தெளிவு பெறட்டும்; குருநாதரின் கீதம் கேட்டு!

★ ★

"நாட்டு மக்களிலுள்ள பேதா பேதங்களையும் பரஸ்பர விருப்பு வெறுப்புகளையும் நம்பிக்கைக் குறைவையும் யோசித்துப் பார்த்தால் வெகு தூரத்திலுள்ள கேந்திர ராஜதானியிலிருந்து இந்த அகண்ட பாரத நாட்டின் நிர்வாகம் நடத்த இயலாது என்பது வெட்ட வெளிச்சமாகும். தில்லிக்கும் சென்னைக்கும் 1361 மைல்.

"எவ்வளவு காலம் வரையில் தற்போதைய மத்திய ஆட்சியில் தலைசிறந்து விளங்கும் மகான்களால், பிரிவு மனப்பான்மையை இழுத்துப் பிடித்துக் காரியம் நடத்த இயலும்? அப்படிச் செய்தாலும் அவர்களுக்குப் பின், வருங்காலத்தில் அரசியல் பணியில் ஈடுபடுகிறவர்களுக்கு அந்த சக்தி இருக்கும் என்பது சந்தேகம். பெரிய பாண்டம் செய்து அது உடைந்து போனபின் கவலைப்படுவதைக் காட்டிலும் சிறு பாண்டங்களாகவே செய்து முடிப்பது நலம்.

"தற்போது, பிரதேச ராஜ்யங்களின் அதிகாரங்களையெல்லாம் கேந்திர ஆட்சிக்கு உறிஞ்சிக் கொள்ளும் நடவடிக்கைகள் மிக வேகமாக நடைபெற்று வருகின்றன.

"இது வருங்காலத்தில் நிலைத்து நிற்க முடியாத ஒரு ஏற்பாடாகும். எதிர்காலத்தில் நடக்கப்போவதையுணர்ந்து அதற்குத் தகுந்தவாறு இப்பொழுதிலிருந்து கட்டடம் நிர்மாணிப்பது புத்திசாலித்தனம்.

"சிறு தொகை சேமிப்பு வருமானம்தான் உங்களுக்கு" என்று மத்திய நிதி மந்திரியின் உத்தரவைப் பிரதேச மந்திரிகள் ஒப்புக்கொண்டு விட்டார்கள். வரிகள் திட்டத்திலும், வரவரப் பிரதேச உரிமைகள் குறைந்துகொண்டே வருகின்றன.

"ஐந்தாண்டுத் திட்டங்கள் என்று போட்டுக் கொண்டு ஒவ்வொரு சிறு காரியத்துக்கும் கட்சிக்காரர்களும் மந்திரிகளும் மாதம் தவறாமல் விமானம் ஏறி தில்லிக்கு விண்ணப்பதாரர்களாகச் சென்று வருகிறார்கள். இன்னும் சில நாள் கழித்ததும் விற்பனைவரியும் சந்தோஷமாக மத்திய அரசாங்கத்துக்குக் கொடுத்து விடப்படும் என்று எதிர்பார்க்கலாம். நிலவரியும் மாறுதல் அடையும். எண்ணெய்க்கும் புகையிலைக்கும் மில் துணிக்கும் வரி போடுவதுபோல் எல்லாச் சாகுபடி பயிர்களுக்குமே மத்திய ஆட்சியே இனிமேல் வரி போட்டுக் கொண்டு பிரதேச நிர்வாகத்துக்காக 'பட்ஜெட்' போட்டு மானியங்கள் தரும் காலமும் சீக்கிரம் வரும்—அதாவது தற்போது நடைமுறையிலிருந்துவரும் போக்கு இப்படியே நடந்து கொண்டு போனால்.

"அரசியல் சக்திகளுக்கிடையே ஒரு கடும் சுழல் ஏற்படும் காலம் வரும். அப்போது பிரிந்தோடும் பாகங்களைப் பிடித்திழுக்கக் கூடிய ஒரு தலைவர் கூட மத்திய ஆட்சியில் இல்லாமலிருப்பது புலப்படும்."

—ஆச்சாரியார்.

திருவாரூரில் அண்ணா!

7-7-57 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு
திருவாரூரில்

அறிஞர் அண்ணா
மு. கருணாநிதி

ஆகியோர் பேசுவார்கள்

—தி. மு. க., திருவாரூர்

அல்லி . . .

※ 5-ம் பக்கத் தொடர்ச்சி

சட்டிலின்மீது அக்பர் பேரரசராகப் பட்டம் சூட்டிக் கொள்ள, தங்கள் மகள் அல்லி பேரரசியாக அவரது பக்கத்திலே அமர்ந்து அணி செய்ய, தாங்கள் முதல் அமைச்சராகத் தொண்டாற்ற, செங்கோலோச்ச வேண்டுமென்பதே எங்கள் திட்டத்தின் இறுதிக் கட்டம்," என்று ஆட்டத்தில் வரும் கட்டியக்காரனைப் போலப் பேசி, அக்பரின் திட்டங்களை வெளிப்படுத்தினான், அவனது நண்பன் முகம்மது அலி அனைவரது முகத்திலும் வெற்றியொளி வீசியது. யாவற்றினும் சிறப்பாக, துர்க்காதாசின் கண்கள் வியப்பால் விரிந்தன.

* * *

நல்ல காலை வேளை. முன்பே சொல்லி வைத்தாற்போல, பகலவனை வரவேற்கும் பணியில் பறவைகள் ஈடுபட்டன; இங்குமங்கும் ஓடிப்பாடி இன்னிசை பரப்பின. 'ஒருவனது சிறப்பு அதிகரிக்க அவனை எதிர்ப்போரின் தொகையும் அதிகமாகின்றது! இளவரசன் அக்பர் கொடுமைகளை நீக்கி, நல்லனவற்றைச் செய்ய முயற்சித்துக் கொண்டிருக்கும்போது, அவனுக்கும் ஏதாவது தீங்கு நிகழ்ந்து விடுமோ என ஐயுற்று, 'அக்பர் நலமுடனுள்ளானா?' எனும் பேராவலால் அக்பரின் பாசறையை எட்டிப் பார்த்தான், ஆதவன். அவன் ஐயுற்றதே நிகழ்ந்துவிட்டது!

பொய்கைக் கரையிலே, பாசறையருகே இராசபுத்திர வீரர் சிலர் கூடி ஏதோ முணுமுணுத்துக்கொண்டிருந்தனர். அப்போது ஒரு குதிரையின் காலடிச் சத்தம் கேட்டது. அவர்கள் ஒலி வந்த திக்கை நோக்கிய உடனேயே அச்சத்தம் நின்றுவிட்டது. மீண்டும் அதே ஒலி; திரும்பிய உடனேயே சத்தம் நின்றது. இந்நிகழ்ச்சி பன்முறை நடந்தது. அஃது அவர்களுக்குப் புரியாப் புதிராயிருந்தது. இறுதியில், ஒரு முகலாய வீரன் டில்லிக்குச் [illegible]ல்லும் சாலையில் மறை[illegible] மறைந்து திருட்டு விழிப்பு விழித்துக் கொண்டு குதிரையின்மேல் செல்வதைப் பார்த்து விட்டனர்.

இராசபுத்திர வீரர்கள் அவனை நோக்கிச் செல்ல, முகலாய வீரனோ குதிரையைத் தட்டி ஓட்டினான். இராசபுத்திர வீரர்களும் குதிரைகளின் மீதேறித் துரத்தி, அவனைப் பிடித்துவிட்டனர். அவன் முகத்தில் அசடு வழிந்தது. அச்சத்தால் அவனது உடல் வியர்த்துக் கொட்டியது. இருண்ட முகம் அவனது மனக்குழப்பத்தைப் பறைசாற்றியது. பல வீரர்களும் அவனைப் பல கேள்விகள் கேட்டும் கற்சிலை போலப் பேசாதிருந்தான். ஆராய்ந்து அவனிடமிருந்து ஒரு கடிதத்தைக் கைப்பற்றினர். கைப்பற்றிய கடிதத்தைப் படித்த இராசபுத்திர வீரர்கள் திகைப் புற்

"அப்பா!

வணக்கம். நலம்.

தகுதியான காலம் கிடைத்துள்ளது. பல இராசபுத்திர அரசர்களும் என்னிடம் நட்புப் பாராட்டி, 'எங்கள் பகுதியிலேயே பேரெழிலுடன் விளங்கும் அல்லியை உன் மனைவியாக்குவோம். நீ பேரரசனாக முடி சூட்டிக் கொள். உனது தந்தையைக் கொன்று டில்லியின் மயிலாசனத்தில் உன்னை அமர்த்துவோம். எங்கள் சொற்படி நட' என்று பேசினர். நானும் அவர்களது சொற்படி நடப்பவனைப்போல் நடித்துள்ளேன். நண்பர்களைப் பழிவாங்குவது எளிது! தாங்கள் இதைக் கண்டவுடனேயே புறப்பட்டு வந்தால் அவர்களை வீழ்த்தி, இராசபுதனத்தினையும் நம் பேரரசில் சேர்த்துக் கொள்ளலாம். நாளை காலைக்குள் எனக்குப் படை கிடைக்க வேண்டும்.

இங்ஙனம்
அக்பர்.

அந்த வீரர்கள் அம்முகலாய வீரனையும், கடிதத்தையும் துர்க்காதாசிடம் ஒப்படைத்து விட்டு, வந்துள்ள அழிவைப் பல இராசபுத்திர மன்னர்க்கும் அறிவுறுத்த குதிரையேறிப் பறந்து சென்றனர். அக்கடிதத்தில் இருந்த செய்திதான் என்னவென்று கூர்ந்து படித்த துர்க்காதாசு திகைத்தான்!

துர்க்காதாசு தான் காண்பது கனவோ என ஐயுற்றான். 'இளவரசன் இவ்வாறு எழுதவோ அன்றி எண்ணவோ துணியமாட்டான்' எனத் திட்டமாக எண்ணினான். ஏதோ சூழ்ச்சி நடந்திருக்க வேண்டுமென நினைத்தான்.

கைதியின் முகத்திலே செய்த தவறுக்காக வருந்தும் 'பச்சாதாபக் குறிகள்' காணப்பட்டன. துர்க்காதாசு அவனையணுக, கொடும் பாம்பின் வாயிற்சிக்கிய தவளை போலத் தவித்தான் அவ்வீரன்.

"நீ அக்பரின் வீரனா? என்ன சதி நடந்தது?"

நீண்ட அமைதி நிலவியது.

'உள்ளதைக் கூறின் உயிர் பெறுவாய். இன்றேல் இச் சவுக்குக்கு இரையாவாய்!" என முழக்கமிட்டான், துர்க்காதாசு.

அந்த வீரன் நடுங்கினான்.

"நான் அக்பரின் வீரனல்ல... ஔரங்கசீபின் வீரன்..." என்றான் தயங்கிக் கொண்டே.

துர்க்காதாசுக்கு வியப்பு அதிகமாகியது. "பின் நீ இக்கடிதத்தை எங்கு கொண்டு செல்கிறாய்?"

"இந்தக் கடிதத்தை ஔரங்கசீபே எழுதினார். தன் மகன் அக்பர் தனக்கு எழுதுவது போலவே எழுதினார். தன் மகன் தனக்குப் பகையாக உருவாகிக் கொண்டிருந்ததை ஒற்றர்கள் வாயிலாக அறிந்த அவர், அக்பரை அழிக்க அவ்வாறு சூழ்ச்சி செய்தார். எனக்கு ஒரு ஊரையே மான்யமாகத் தந்து, நேற்றிரவு என்னிடம் இக்கடிதத்தைக் கொடுத்து, 'விடியுமுன் அக்பரின் பாசறையடைந்து, அங்கிருந்து புறப்பட்டு, அக்பரிடமிருந்தே வஞ்சகக் கடிதம் கொண்டு செல்வதைப்போல நடித்து, கடிதத்தை எப்படியாவது இராசபுத்திரரது கையில் கிடைக்குமாறு செய்துவிட்டுத் திரும்பு' எனக் கட்டளையிட்டார். நான் குலத்தைக் கெடுத்த கோடாலிக் காம்பானேன். அவர் கூறியவாறே செய்து விட்டேன். 'பணத்தைவிடக் குணம் பெரிது' என்பதை உணராமல் தவறு செய்து விட்டேன்," என்று சொல்லிவிட்டு ஏக்கத்தோடு துர்க்காதாசைப் பார்த்தான். அவனது கண்களிலிருந்து வற்றாத ஊற்றுக் கண்ணீர் பெருக்கெடுத்தது. உயிர்ப் பிச்சைக் கேட்டது அவனது முகத்திரை. நடந்தவை யாவும் நீல விண்ணிலே வெண்ணிலாப் போல துர்க்காதாசுக்கு விளங்கின.

* * *

மாலைக்குள்ளே இராசபுத்திர மன்னர் பலரும் தத்தம் படையோடு கூடி அக்பரது படையோடு பொருதனர். துர்க்காதாசு ஒற்றன் கூறிய உண்மைகளை எவ்வளவோ எடுத்துக் கூறியும் அதை அவர்கள் நம்புவதாயில்லை. மகளுக்காகவும் மருமகனுக்காகவும் பேசுகிறான் என்றனர். மருண்டோர்க்கு கண்டதெல்லாம் பேயன்றோ? துர்க்காதாசின் சொற்கள் அம்மன்னரை சமாதானப்படுத்த முடியவில்லை. அக்பர் உயிருக்கு ஓட நேர்ந்தது; அல்லியும் அவனைத் தொடர்ந்தாள். தென்னாடு நோக்கி இருவரும் சென்றனர். 'கணவனும், மனைவியும் துன்பத்திலும் ஒத்த பங்கு கொள்வதே இயல்பு' என்பதுணர்ந்து அவர்களைக் கண்டு மகிழ விழைவான்போல அவர்கள் சென்றுகொண்டிருந்த அவ்வெம் பாலைவனத்தின் விண்ணிலே எழுந்தான், முழுமதி. நிறைமதி கண்டு மகிழ்ந்தாள் அல்லி. "பெருமுயற்சியால் திரட்டிய அன்பினமிழ்து, ஒரு துளி வஞ்சக நஞ்சாற் பாழானதே!" என முணுமுணுத்தான், துர்க்காதாசு! "ஆம்; ஆம்!" எனக் கண் கசக்கி, பனிநீராம் கண்ணீர்த் துளிகளைச் சிந்தின, விண்மீன்கள்!

ஃ

விற்பனையாகிறது!

உயர்ந்த எண்ணங்கள் குலுங்கும் கருத்துக் கருவூலங்கள்!

மாறன், எம். ஏ. எழுதிய

ஏன் வேண்டும் இன்பத் திராவிடம்?

அறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன்-
ஆகியோரின் முன்னுரையுடன்
விலை: ரூபாய் 1—50

★

பி. சி. கணேசன், பி. எஸ்ஸி. பி. டி. எழுதிய

அபிசீனிய அடிமை

மு. கருணாநிதி அவர்களின் முன்னுரையுடன்
விலை ரூபாய் 1.

விபரங்களுக்கு:

முத்துவேல் பதிப்பகம்,

11, மதுரை ரோடு, : : திருச்சி—8.

விடுதலை முரசு தட்டியோர் வீழ்ந்துபட்ட சோகச் சரித்திரம்!

❊ 4-ம் பக்கத் தொடர்ச்சி

அதே சமயம் சோவியத் டாங்கிகள் ஹங்கேரிக்குள்ளே வரிசை வரிசையாக நுழைந்தன! டாங்கிப் படையினர் இரக்கம் சிறிதுமின்றி நூற்றுக்கணக்கான ஹங்கேரிய வீரர்களைச் சுட்டுக் கொன்றார்கள்!

நிலைமைகளைக் கண்காணிப்பதற்காக—ஹங்கேரிய எழுச்சியை அடையாளம் தெரியாமல் அடக்குவதற்காக ரஷ்யாவிலிருந்து சோவியத் உதவிப் பிரதமர் மிக்கோயனும்; முக்கியஸ்தரான சுஸ்லாவ் என்பவரும் ஹங்கேரிக்கு வந்தனர்!

அவர்கள் இருவரும் சேர்ந்து செய்த முடிவுகள் அனைத்தும் அவ்வப்போது நாகி செய்ததாக அவர் பெயரால் வானொலி மூலம் ஒலி பரப்பப்படடன!

ஒரு தொழிலாளர் தூதுகோஷ்டி நாகியைப் பார்த்துப் பேச அனுமதிக்கப்பட்டது. அந்தத் தூதுகோஷ்டியினர் பதினைந்துபேர் மௌனமாக 'சப்-மிஷின்' துப்பாக்கிகளை வைத்துக்கொண்டு சுற்றிலும் நின்றுகொண்டிருக்க; அவர்களுக்கு நடுவில் நாகி உட்கார்ந்திருப்பதைக் கண்டனர்.

—இதற்கிடையில் ஆங்காங்கே நடைபெற்று வந்த தெருச் சண்டையில் விடுதலை வீரர்கள் வெற்றிபெற்றவாறே இருந்தனர்!

—நிலைமை ஒருவாறு கட்டுக்கடங்கியது!

நாகி விடுதலையடைந்தார்; அதனால் போர் நிறுத்தத்திற்கும் இசைந்தார்!

போர் நின்றது; சோவியத் துருப்புக்களை வாபஸ் பெறுவதாக ஒப்புக்கொண்டு மிக்கோயனும் சுஸ்லாவும் ரஷ்யா திரும்பினர்.

நாகி உடனடியாக; மக்களால் வெறுக்கப்பட்ட ஏ.வி.எச். என்னும் பாதுகாப்புப் போலீசைக் கலைத்தார்.

ஹங்கேரி நடுநிலைமை வகிக்கும் என்று பிரகடனப்படுத்தினார்.

வார்சா ஒப்பந்தத்திலிருந்து ஹங்கேரி தன்னை விடுவித்துக் கொள்வதாகவும் அறிவித்தார்.

—இந்த அறிவிப்புகள் ரஷ்ய ஆட்சி பீடத்தை ஒரு கலக்கு கலக்கிற்று. ஏனெனில் வார்சா ஒப்பந்தத்திலிருந்து ஹங்கேரி விடுபட்டால் அதற்கு ஹங்கேரி ரஷ்யாவின் இராணுவப் பிடியிலிருந்து விலகுகிறது என்று பொருள்!

—அதனால் நவம்பர் 3-ம் தேதியன்று இனிமேல் நடக்க வேண்டியவைகளைக் குறித்துப் பேசுவதற்காக நான்கு பேர் கொண்ட கமிட்டி ஒன்றினை ரஷ்யா அழைத்திருந்தது.

அந்தக் கமிட்டியினர் ரஷ்யா சென்றதும் அவர்களுக்கு விருந்து ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

விருந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் நேரம்—

திடீரென்று போலீசார் பிரவேசித்தனர், நால்வரையும் கைது செய்தனர்! (இதற்குப் பிறகு அந்த நால்வரைப்பற்றியும் தகவல் ஏதும் கிடைக்கவில்லை.)

மறுநாள் ஹங்கேரியிலே சோவியத் படை புகுந்தது. தலைநகரான புடாபெஸ்ட்டில் அந்த இராணுவம் மக்களிடையே பீதியை உண்டாக்குவதற்காக வீடுகளை நோக்கியெல்லாம் சுட்டது; புரட்சி வீரர்களைச் சரணடையும்படி வற்புறுத்தியது!

அதே நேரம் வானொலி நிலையத்தையும் கைப்பற்றியது!

அது மட்டுமா? வேறொரு ஒலி பரப்பும் வந்தது.

ஜானஸ் காதர் என்பவர் அதுவரை கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் காரியதரிசியாக இருந்தவர்.

அவர்தான் இனிமேல் ஹங்கேரியின் பிரதமர் என்று வானொலி நிலையம் ஒலிபரப்பியது!

அதுமட்டுமா? புதிய மந்திரி சபை அமைந்திருப்பதுபற்றி காதரே வானொலியில் பேசினார்.

ஆனால் காதர் அந்த நேரம் ஹங்கேரியிலேயேஇல்லை. அவர் மாஸ்கோவில்தான் இருந்தார்.

ஆனால் எப்படி அவரது குரல் வானொலியிலே கேட்டது?

அது வேறொன்றுமில்லை; டேப் ரிக்கார்டரில் பதிவு செய்யப்பட்ட அவரது பேச்சுதான் அவரே ரேடியோவில் பேசுவது போல ஒலி பரப்பு செய்யப்பட்டது!

சோவியத் துருப்புகள் வாபசாகும்; அன்னிய ஆதிக்கம் ஒழியும்; ஹங்கேரிய இனம் தழைத்தோங்கும் என்று எதிர்பார்த்த நாகி ஏமாந்தார். உடனே யூகோஸ்லேவிய தூதராலயத்தில் சரண் புகுந்து விட்டார்!

—இதுதான் ஹங்கேரியின் தேசிய எழுச்சி, ஆதிக்க வெறியர்களால் அழிக்கப்பட்ட சோகக் கதையாகும்! ஃ

செலவுக்குத் திரைபோடும் 'சிக்கன'க் கூக்குரல்!

பூசணிக்காய் போவது தெரியாது; கடுகு போவதுதான் தெரியும்.

—என்பார்கள் பழைய பாட்டிமார்கள்!

இப்போது இந்திய அரசாங்கத்தினர் நடத்திவரும் 'சிக்கனம்' என்கிற புதிய நாடகமும் இப்படித்தான் இருக்கிறது!

சிக்கனம்; செலவுக் குறைப்பு—கடுகு விஷயங்களில்!

வீண் செலவு; விரயம்—இவை பூசணிக்காய் போன்ற விஷயங்களில்!

சம்பளத்தை—அதுவும் பத்து சதவிகிதம் குறைத்துக் கொண்டிருக்கிறார்கள்!

—ஆனால் இதர விஷயங்களில் இதே போன்றே சிக்கன முறை கையாளப்படுவதாகத் தெரியவில்லை!

❊❊❊ பண்டிதருடைய அரசியலில் இரட்டைக் குழந்தை என்று பெயரெடுத்துவரும் கிருஷ்ணமேனன் இப்போது பாதுகாப்பு அமைச்சராக இருந்து வருகிறார்!

முன்பே 'ஜீப் ஊழல்' போன்ற வீண் விரயங்களுடன் இணைத்துப் பேசப்படுகிறவர், இவர்!

பாதுகாப்பு அமைச்சரான இவர்தான் இப்போது இங்கிலாந்து சென்றிருக்கிறார்.

ஏன்?

ஒரு மாநாட்டில் கலந்து கொள்ள!

அந்த மாநாடு ஏதாவது பெரிய முக்கியத்துவம் வாய்ந்ததா? பாதுகாப்பு அமைச்சரே சென்று கலந்து கொள்வது போன்ற முக்கிய பிரச்சினைகள் ஏதாவது அதில் விவாதிக்கப் பட்டதாகத் தெரிகிறதா?

இல்லை; அப்படி யொன்றும் தெரியவில்லை

இப்போதுதான் கிருஷ்ண மேனன் அமெரிக்காவிற்குச் சென்று வந்தார். அதற்குள் அவர் இங்கிலாந்து சென்றிருக்கிறார்!

பாதுகாப்பு இலாக்கா மிகவும் பொறுப்பான இலாக்கா.

அப்படி ஒரு இலாக்கா இப்படியெல்லாம் நாடு சுற்றிக் கொண்டிருக்கலாமா?

அல்லது நாடு சுற்றிக்கொண்டிருப்பவர்களால் நிர்வகிக்க முடிகிற அளவுக்கு அந்த இலாக்கா அவ்வளவு சாதாரணமாகிவிட்டதா?

★★★ கிருஷ்ண மேனனால் நாடு சுற்றுவது தவிர்க்க முடியாதது போலும்!

அதனால்தான் அவர் பதவி ஏற்ற முப்பத்தி ஆறே மணி நேரத்திற்குள் அடிஷனல் செகரட்டரி' என்கிற பெயரில் ஒரு புது உத்யோகத்தைச் சேர்த்து, அவருக்கு உதவி புரிந்த ஒரு நபரை அதில் அமர்த்தியிருக்கிறாராம்!

வேறு எந்த இலாக்காவிலும் இல்லாத அந்தப் பதவி அவருடைய இலாக்காவில் மட்டும் ஏற்படுத்தப்படுவானேன்?

—இப்படியெல்லாம் வரிப் பணத்தை விரயமாக்கும் இந்த அமைச்சர்தான் சிக்கனமென்று கூறிக்கொண்டு தனதுசம்பளத்தில் பத்து சதவீதத்தைக் குறைத்துக் கொண்டிருக்கிறார்.

இதற்குப் பெயரா சிக்கனம்?

❊❊❊ உத்தரப் பிரதேச அரசாங்கத்தார் தங்களது உயர்தரப் பணியாளர்களின் உபயோகத்திற்காக இதுவரை 200 கார்களைப் பயன்படுத்தி வருகிறார்கள்.

—இது போன்ற கார்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளின் சொந்த உபயோகத்திற்குப் பயன்படுத்தப்படுவது உலக மறிந்த உண்மை!

—இருந்தும் இந்தக் கார்களைத் திரும்பப் பெறுவதற்கு முடியவில்லையாம், உத்தரப் பிரதேச அரசாங்கத்தினரால்!

—இதற்குப் பெயரா சிக்கனம்?

❊❊❊ இதோடு முடிந்து விட்டதா? இல்லை!

பம்பாய் அரசாங்கத்தார் இப்போது ஒன்று 22,000 ரூபாய் வீதம் பதினேழு புதிய கார்களை வாங்கப் போகிறார்கள்!

புதிய கார்கள் பதினேழு!

ஒன்று இருபத்தி இரண்டாயிரம் வீதம்!

இதற்குப் பெயரா சிக்கனம்?

●●●



சிந்தனையாளர் இங்கர்சால்

எழுதியவர்: இராதாமணாளன்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிறந்து வாழ்ந்த அமெரிக்க நாட்டின் மாபெரும் சிந்தனைச் சிற்பியான ராபர்ட்கிரீன் இங்கர்சால் பகுத்தறிவுப் பிரச்சாரத்தைத் துணிந்து செய்து மாபெரும் எதிர்ப்புகளைச் சமாளித்து நிறைந்த புகழுடன் விளங்கியவர். "கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும் வேட்ப" மொழிகின்ற சொல்வன்மை பெற்றவர். பாதிரியாரின் மகனாகப் பிறந்தும் பகுத்தறிவுப் பாதையில் திரும்பி ஏறு நடை போட்ட அந்த ஏந்தல் மனிதனுக்குத் தேவையான எல்லாப் பொருள்களையும் பற்றிச் சுயமாக சிந்தனை செய்து திட்டவட்டமாகத் தன் கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார். அறியாமையில் உழலும் இந்த உலகம் தமிழ்நாட்டுப் பகுத்தறிவாளராகிய நம்மை ஏசியது போலவே அவரையும் நாத்திகர் என்று கூறிப் பழிசாற்றத் தவறவில்லை.

அந்த வீரரின் வாழ்க்கை வரலாற்றையும், பல்வேறு முக்கியமான தலைப்புகளில் அவர் தீட்டியுள்ள கட்டுரைகளையும், அவரது சிறப்பான சில பொன்மொழிகளையும் நல்ல எளிய நடையில் தோழர் இராதாமணாளன் ஆக்கித் தந்துள்ளார். அனைவரும் படித்துப் பயன் பெறலாம்.

விலை ரூ. 1—25

வெளியிட்டோர் :

பிரேமா பிரசுரம், சென்னை 24

இயற்கை சிரிக்கிறது

எழுதியவர் : நா. பாண்டுரங்கன் எம். ஏ.

இரண்டு ரோஜாக்கள், அரசியல், சிறிய நிலவும் பெரிய நட்சத்திரமும், மானும் மயிலும், மேகங்கள், இயற்கை சிரிக்கிறது—என்ற தலைப்புகளில் தோழர் பாண்டுரங்கன் அவ்வப்போது தீட்டிய கருத்துக் கோவைகளின் தொகுப்பே இந்நூல். சிறு கதை போன்ற வெளித்தோற்றத்துடன், சிறந்த ஒரு கருத்தினை மையமாகக் கொண்டு கட்டுரைகள் தீட்டிவரும் தனியான ஒரு முறையைத் தோழர் கையாண்டுள்ளார். கதையாக மதித்துப் படிப்பவர்க்கு ஏமாற்றந்தான் பரிசாகக் கிடைக்கும். ஆனால் உள்ளே மறைந்திருக்கும் கருத்தினை உன்னிப் பார்த்துச் சிந்திப்பவர்க்கு நல்ல விருந்தாகும் இந்தத் தொகுப்பு.

விலை ரூ. 1.

நலம் பெற்று வாழ்க !

எழுதியவர் : வே. கபிலன்.

திருக்குறள் மற்றும் சங்க இலக்கியங்கள் பலவற்றிலிருந்து மேற்கோள்களை எடுத்து, உரிய இடங்களில் ஏற்றவகையில் சேர்த்து, தொடர் கட்டுரையாக எழுதப்பட்டுள்ள இந்நூல் உண்மையிலேயே ஒரு நல்ல வாழ்க்கை விளக்க நூலாகத் திகழ்கிறது. மணவாழ்வு தொடங்கும் ஆணும் பெண்ணும் இல்லறத்தைச் செம்மையுற நடத்தற்கான வழிவகைகளை நல்ல தமிழில் அழகுற எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. திருமணப் பரிசுக்கு ஏற்றதொரு நூலாகும் இது.

விலை ரூ. 1—25

இலக்கியச் சோலை

எழுதியவர் : வே. கபிலன்.

சங்க இலக்கியங்களில் பொதிந்து செறிந்து கிடக்கும் உவமைச் சிறப்பினையும், எழிலையும், நாகரிக மேம்பாட்டையும் அவற்றை நேரடியாகப் படித்து உணர்ந்துகொள்ள எல்லோர்க்கும் இயலாது என்பதால் சிறந்த சிலவற்றைப் பல்வேறு தலைப்புகளுக்கேற்பத் தேர்ந்தெடுத்துப் பத்து கட்டுரைகளாகத் தீட்டியுள்ளார் ஆசிரியர். தமிழ்ப் பயில்வோருக்கு உதவும்வகையில் நல்ல தமிழ் நடையில் விளக்கமாக எழுதப்பட்டுள்ளது இந்நூல்.

விலை ரூ. 1.

மேற்கண்ட மூன்று புத்தகங்களையும் வெளியிட்டோர் :

காதித் திரை . . .

❊ 2-ம் பக்கத் தொடர்ச்சி

வாங்க; அதனால் எனக்கு 'ராயல்ட்டி' தொகை கிடைப்பதால் என் வாழ்க்கைச் சக்கரம் சுழல்கிறது.

—இந்தப் பொருள்பட பண்டிதர் பிரசங்கம் நிகழ்த்தினார்.

பாரதத்தின் பிரதமருக்குக் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் சொந்த விவகாரங்களை வெளியிடும் அளவுக்கு அவசியம் ஏற்பட்டதேன் ?

கராச்சியிலே தீர்மானம் நிறைவேற்றியபோது இருந்த 500 ரூபாய் என்பது இரண்டாயிரம் ரூபாய்க்குச் சமம் என்றும்; அதனால் அதை இப்போது அனுஷ்டிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் அவர் வற்புறுத்த வேண்டிய நிலைமை எப்படி ஏற்பட்டது?

வீட்டு நிர்வாகச் செலவு; தோட்டத்துக் கண்காணிப்புச் செலவு, க்ஷவர பிளேடுகள் வாங்கிய செலவு — இவைகளையெல்லாம் அவர் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் அறிவிக்க வேண்டிய அளவுக்கு அற்புதம் என்ன நேர்ந்துவிட்டது?

—தோழர் காமத் எழுதியிருப்பவை உண்மைதான் !

காரியம் மிஞ்சியிருக்கிறது; தலைக்குமேல் வெள்ளம் போயிருக்கின்றது.

அதனால்தான்—ஓட்டுக்கு விடப்பட்டுத் தோற்றுப்போன பிரச்சினையை எப்பாடுபட்டாவது மறைக்க வேண்டுமென்பதற்காகப் பண்டிதர் படாத் பாடுபட்டிருக்கிறார் ! ஃ

பிறைவானம் . . .

❊ 11-ம் பக்கத் தொடர்ச்சி

முகத்தை ஏறிட்டு நோக்கினான். அவன் கண்கள் 'எதையோ' கெஞ்சிக் கொண்டிருந்தன. அவன முகக் குறியிலிருந்து அவன் ஏதோ சொல்ல விரும்புகிறான் என்று அம்மா உணர்ந்தார்கள்.

முத்து அம்மாவை நெருங்கினான். "அம்மா, கூடைக்குள்ளே அணில் குட்டி இருக்கிறதம்மா ! அதைக் கொஞ்சம் கவனிச்சுக்குங்க அம்மா! அதுக்குத்தான்..."

—அம்மாவுக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை.

"என்னமோப்பா! 'பாவம், பாபம்'ன்னு நான் கத்திக்கிட்டே இருக்கேன்; நீ கேட்கமாட்டேங்கிறே!"-அம்மா அந்த நேரத்திலும் செல்லமாகக் கோபித்துக்கொண்டார்கள்,

"அம்மா! அதை பூனை கினை புடிச்சிடப் போவுதம்மா...மறந்துடாம பார்த்துக்குங்கம்மா!..." —முத்துவின் குரலில் தெரிந்த பரிதாபமும், கண்களில் பளிச்சிட்ட கருணையும் அம்மாவை என்னவோ செய்தது!

முத்து பள்ளிக்குப் போய்விட்டான், உள்ளத்தை அணில் குட்டியிடம் விட்டுவிட்டு!

அவனது கருணை உள்ளத்தை எண்ணிக்கொண்டே அம்மா வீட்டிற்குள்ளே நுழைந்தார்கள்.

என்ன செய்வதென்றே அவர்களுக்குப் புரியவில்லை—

அதைப்போலவே என்ன நடக்கப் போகிறது என்பதைப் புரிந்துகொள்ளாத முத்துவுக்குபள்ளியில் அன்றைய பொழுது போவதற்குள் போதும் போதுமென்றாகிவிட்டது!

மாலையில் பள்ளி முடிந்து வீட்டிற்குத் திரும்பி வந்தான் முத்து!

ஆசையோடு — ஆவலோடு அணில் குட்டியை நோக்கி ஓடினான். அதை மூடி வைத்திருந்த கூடையைத் திறந்தான். ஆனால் உள்ளே...?

மறுகணம் "அம்மா!" என்று அலறினான் முத்து. அம்மா பதறிக்கொண்டு ஓடிவந்தார்கள்.

"எங்கேம்மா அணில் குட்டி? ஐயையோ! காணோமே அம்மா!" என்று அலறினான் முத்து!

"ஏண்டா ஒரேயடியா என்னத்தையோ பறிகொடுத்ததுபோலக் கத்துறே? நான்தான் அதைத் தூக்கிக் கொல்லையில் எறிந்தேன்!"—அம்மா பேசவில்லை; அப்பாவின் கர்ண கடூரக் குரல்

"அந்த அணில் குட்டியை நீ வெளியே தூக்கி எறியப் போறியா? அல்லது நானே அதைத் தொலைச்சித் தலையை முழுகட்டுமா?"

—என்று அன்று அப்பா போட்ட 'சபதம்' முத்துவின் நினைவுக்கு வந்தது.

மறுகணம் முத்துவின், கண்களில் 'குபீர்' என்று நீர் நிறைந்தது. நாம் நினைப்பதைப்போல அவன் வாய்விட்டு அழவில்லை; கத்தவில்லை; கதறவில்லை; ஆனால் பொங்கிவந்த சோகத்தை அணை போட்டுத் தடுக்க முடியாதவன் போல் விம்மிக் கொண்டு கொல்லைக்கு ஓடினான்.

"பாவம் தொலைந்தது!" என்று முணுமுணுத்தார் அப்பா !

மௌனமாகத்தான் கொல்லைக்குச் சென்றான் முத்து. ஆனால் கண நேரத்தில் கொல்லையிலிருந்து முத்துவின் பயங்கரமான—குலை நடுக்கும் "ஐயோ!" என்ற அவல ஓலம் எழுந்தது!

அப்பாவும் அம்மாவும் துடிதுடித்துப் போய் என்னவோ, ஏதோவென்று கொல்லைக்கு ஓடினர்.

அங்கே......?

கண்களை மூடிக்கொண்டு கதறிக் கொண்டிருந்த முத்துவை மட்டுமல்ல; எதிரே பூனைக்கு இரையாகி குறை உடலாகக் கிடந்த அவனது அன்புக்கு அன்பான அணில் குட்டியையும் பார்த்தனர்!

கூடையின் கதவு திறக்காதா—என்று காத்துக்கிடந்த பூனைக்கு தன்னையும் அறியாமல் நல்ல விருந்து வைத்துவிட்டார் அப்பா !

ஆனால் இப்போதோ......முத்துவின் அலறலையும் அன்பின் வலிமையையும் கண்ட அப்பாவின் கண்களில் எங்கிருந்தோ வந்து ததும்பி நின்றது இரண்டு சொட்டுக் கண்ணீர்!

*　　*　　*

"ஐயோ, பாபம்! பாபம்!"என்று இப்போதும் முணுமுணுக்கிறார்கள் அம்மா!

"நம்ப முத்துவோட அணில் செத்துப் போயிட்டாமே; பாவண்டி ஹேமா!" என்று அனுதாபம் தெரிவிக்கிறார்கள் 'தெருச் சிறுவர்கள்—சிறுமிகள்!'

ஆனால் முத்துவோ பாபத்தின் பொருள் தெரியாது நேற்றுவரை தவித்துத் தத்தளித்தவன்—இப்போது "அந்தோ, இதுதான் பாபமோ?" என்று முணுமுணுத்துக்கொண்டு கொல்லையிலே அவனது அன்பு அணில் குட்டிக்கு அவன் கட்டிய 'சமாதி'யின் முன் உட்கார்ந்து கொண்டிருக்கிறான்.

நீங்களே சொல்லுங்கள்; அந்தோ: இதுதான் பாபமா? ஃ

—சொர்ணம்

★ அந்தோ, ★ இதுதான் பாபமா?

"ஐயோ, பாவம் தம்பீ! பாவம்!" என்ற அம்மாவின் வேதனைக் குரலும், "இதென்ன அக்கிரமம்! செய்யலாமா இப்படி! உடனே அதை விட்டுவிடு; இல்லை ...உதைதான்!' என்ற அப்பாவின் கண்டனக் குரலும், "ஆகா, ஆகா! என்ன அழகாடா இருக்கு! டேய், டேய், கொஞ்சம் எனக் கிட்டேயும் கொடுடா; கொஞ்சிட்டுத் தர்றேன்!" என்ற தெருச் சிறுவர்களின் ஆசை மொழியும், கிணற்றடியில் உட்கார்ந்திருந்த முத்துவின் நெஞ்சத்தில் மாறி மாறி ஒலித்துக் கொண்டிருந்தன.

"பாபம்"-என்கிறார்கள் அம்மா!

"உதைப்பேன்!"—என்கிறார் அப்பா!

"ஆகா, அழகு!"—என்று குதிக்கிறார்கள் தெருக் குழந்தைகள்!

இவ்வளவுக்கும் காரணமாக முத்து என்னதான் செய்து விட்டான்?

முத்துவின் மடியிலே உரிமையோடு விளையாடிக்கொண்டிருந்தது ஓர் 'உருவம்! முத்து அதைத் தன் கைகளில்எடுத்து முகத்துக்கு நேரே பிடித்தான். "இதோ பார்! உன்னால் எனக்கு எத்தனைத் தொல்லைகள் பார்த்தாயா? 'அய்யோ! பாவம்; பாவம்!' என்று அம்மா தலையில் அடித்துக் கொள்ளுகிறார்கள். நீயே சொல்; நான் செய்தது பாபமா? சாகக் கிடந்த உனக்கு உயிர் கொடுத்தது பாபமா?"—முத்து கேட்டான், அழும் குரலில்!

"நீ செய்தது பாபமல்ல; என்னைப் பொறுத்தவரை நன்மையே தான்!" என்று வாய் திறந்து சொல்ல அந்த 'உருவ'த்தால் முடியாதே! ஆனால் நடந்ததை எண்ணிப் பார்த்தால்...

ஊர் தேர்த் திருவிழா என்றால் கூட்டத்திற்கா கேட்க வேண்டும்? கூட்டம் மட்டுமா? கொட்டிக் கொட்டிப் பணத்தை கோடிக் கணக்கில் செலவு செய்வார்களே! அத்தனையும் பாழ், வீண் என்பதை முத்து உணரும் வயதல்லவே அது!

வேடிக்கை பார்க்கச் சென்றான்' களிப்போடு! ஆனால் அங்கேதான் அந்த வேதனையானக் காட்சியையும் கண்டான்! கோவிலுக்குள்—கூட்டம் அதிகமாக இருந்த ஒரு பகுதியில் பரிதாபகரமான நிலையில் கிழே கிடந்தது அணில குட்டி ஒன்று! சாரை சாரையாக நடந்து செல்வோரின் பாதங்களிலிருந்து தப்பி அது மரணப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்தது. ஏதேனும் ஒரு பாதம் அதன்மேல் பட்டால்கூட அது மடிந்து விடும்! அக் காட்சியைக் கண்ட முத்து அதனிடம் பாய்ந்து ஓடினான். அதனால் நகரவும் முடியவில்லை; பிறந்து ஒரு வாரத்திற்குள்தான் இருக்கும் போலிருந்தது; எங்கிருந்தோ, எப்படியோ அங்கே சிக்கிக் கொண்டது! முத்துவுக்கு என்னவோபோல் இருந்தது. அதைத் தொட்டான். ஆனால் அவன் கைகள் வெட-வெட என்று நடுங்கின. அதைவிட வேகமாக அணில் குட்டியின் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. கண்களை மூடி மூடித் திறந்தது. முத்துவின் கண்கள் கலங்கின.

"ஐயோ, பாபம்! உன் அம்மா, அப்பா எங்கே?" என்று பரிவுடன் கேட்டான்.

பிறகு அதற்குப் பேசத் தெரியாது என்பது நினைவுக்கு வந்ததும் வெட்கப்பட்டான். ஆனால் ஒன்று மட்டும் அவன் மனதிலே 'கப்'பென்று பதிந்தது. அப்பாவைப் பிரிந்து — அம்மாவை இழந்து — அந்தகாரமான காட்டின் நடுவில — கும்மிருட்டில் — கொடும் பசிக்கும் கோரமான காட்டு மிருகங்களுக்கும் மததியில் முத்துவே சிக்கிக்கொண்டால்...? ஐயையோ, இதென்ன பயங்கரமான கற்பனை! அந்நிலையில் தான் எப்படித் தவிப்பானோ, தத்தளிப்பானோ, அதைப் போலவே அந்த அணில் குட்டியும் அப்போது துடிப்பதாக உணர்ந்தான்.

மறுகணம் முத்துவின் உள்ளத்தில் எங்கிருந்தோ வந்து புகுந்து விட்டது இனம் தெரியாத பாச உணர்ச்சி! உடனே அதைத் தன் கைகளில் எடுத்துக் கொண்டான். எதிரிலிருந்த 'திருக்குள'த்தை நோக்கி ஓடினான். கரையில் அமர்ந்து கொண்டு தண்ணீர் எடுத்து அதன் வாயில் ஊற்றினான். அணில் குட்டி ஆசை ஆசையாகக் குடித்தது. கடைசியில்... முத்துவின் நெஞ்சிலே களிப்பைத் தந்து அது உயிர் பிழைத்து விட்டது!

சாவின் பிடியிலிருந்து அதைக் காப்பாற்றினனே முத்து; அது பாபமா? அதை வீட்டிற்கும் எடுத்துக் கொண்டு வந்தானே; அது தான் பாபமா? நீங்களே சொல்லுங்கள்!

கிணற்றடியில் உட்கார்ந்து கொண்டிருந்த முத்துவுக்கு ஒரே குழப்பம்! பாபமாமே; எது பாபம்? பாபமென்றால் என்னதான் பொருள்? ஒரே புதிராக இருக்கிறதே! நான் செய்வது பாபமென்றால், நல்லது செய்வதெல்லாம் பாபமா?...அப்படித்தானா?...

"ஏய், என்ன, இன்னைக்காவது அதை எங்கேயாவது கொண்டு போய் விட்டுட்டு வரப்போறியா; இல்லையா?"—அப்போது கொல்லைப்புறம் வந்த அப்பாவின் கடூரமான குரல் எழுந்தது.

முத்து அதை எங்கே கொண்டு போய்விடுவான்? விட்டால் அது எங்கே போகும்? அதன் அப்பாவை, அம்மாவைக் கண்டு பிடிக்க முடியுமா அதனால்? நடக்கக்கூட முடியாதே அது! அப்படி எங்கேயாவது நடந்து, யார் காலுக்கு அடியிலாவது சிக்கி இறந்து விட்டால்?......அல்லது அணில பிடித்துத் தின்னும் குறவர்களின் குத்தீட்டிக்கு இரையாகி விட்டால்?...முத்துவால் அதற்கு மேல் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை!

நான் அதற்கு என்னதான் குறை வைக்கிறேன்! பால் வாங்கித் தருகிறனே! வாழைப்பழம், ஆரஞ்சுப் பழம் எல்லாம் வாங்கி நானே ஊட்டி விடுகிறேனே! நான் 'ஹார்லிக்ஸ்' சாப்பிடும் போது அதற்கும் தராமலா இருக்கிறேன்? இரவில் பத்திரமாகக் கூடையைப் போட்டு மூடியல்லவா வைக்கிறேன்! அதெல்லாம் நான் அதைக் கொடுமைப் படுத்துவதாகுமா? அப்படியானால் இது ஏன் என்னிடம் இத்தனை பிரியமாக--அன்பாக இருக்கிறது?

அதன் பஞ்சு போன்ற மேனியைத் தடவியபடி உட்கார்ந்து கொண்டே இருந்தான்; முத்து!

இப்படி ஒரு நாளல்ல; இரண்டு நாளல்ல; அணில் குட்டியை வீட்டிற்குக் கொண்டு வந்த தினம் முதல், நண்பர்களை மறந்து; விளையாட்டு மைதானத்தை மறந்து; ஆயிரம் முறை இத்தகைய கேள்விகளைக் கிளப்பிக்கொண்டு விடை காண முடியாது தவித்திருப்பான்: பொம்மைபோல் உட்கார்ந்திருந்திருப்பான்; முடிவிலே அம்மா, அப்பா குறிப்பிடுவது போல இது பாபம்தானா? பாபம்தானா?—என்றும் தன்னைத்தானே கேட்டுக்கொள்வான்!

இதற்கிடையில். அம்மாவின் அன்புக் கட்டளை வளர்ந்து கொண்டேசென்றது; அப்பாவின் கோபக் கூக்குரல் எல்லைமை மீறிக் கொண்டிருந்தது!

அன்று....

தேர்வில், தான் வெற்றிபெற்று விட்ட மகிழ்ச்சியான செய்தியை அப்பாவிடம் சொல்லச் சென்ற போது அந்த அன்பான அப்பா—பூரிப்படைய வேண்டிய அப்பா என்ன திட்டு திட்டிவிட்டார்!

குதித்தாடிக் கொண்டு வந்த முத்துவைக் கண்ட அவர், "என்னடா ஆட்டமும், கொண்டாட்டமும்! இந்த அணில் குட்டியை நீ வெளியே தூக்கி எறியப்போறியா? அல்லது நான் எங்கேயாவது தொலைச்சித் தலையை முழுகட்டுமா? ஏழு தலைமுறைக்கும் விடா தேடா சனியன் பிடித்தவனே, இந்தப் பாபம்!' —என்று உறுமினார்.

பிரளயமே எழுந்து அடங்குவது போலிருந்தது. அதற்குப் பிறகும் முத்துவின் முகத்தில் எப்படி மகிழ்ச்சி நிலவமுடியும்? அப்பாவிடமிருந்து அன்பு முத்தம் கிடைக்கும் என்றுதேடி ஓடிவந்தவனுக்கு வசை மாலையல்லவா காத்துக் கொண்டிருக்கிறது!

தான் தேர்வில் வென்ற செய்தியை அப்பாவிடம் சொல்லவேண்டும் என்பதையே அவன் மறந்து விட்டான். அவன் மனதிலே எழுந்து எழுந்து கோரமாகக் கொக்கரித்துவிட்டு அடங்கிய அந்தக் கூக்குரல்......

"நீ அணில் குட்டியை வெளியே தூக்கி எறியப் போறியா? அல்லது நான் எங்கேயாவது தொலைச்சி தலையை முழுகட்டுமா?..."

முத்துவுக்கு வாய்விட்டு அழ வேண்டும் போலிருந்தது. கண்களிலிருந்து வழிந்தோடிய கண்ணீரைத் துடைத்தபடியே உள்ளே ஓடி விட்டான்!

பின் தேர்வு வெற்றிச்செய்தியை அம்மாவின் மூலம் அறிந்தபோது கூட அப்பாவின் கோபம் தணியவில்லையே! மகனின் அன்புருவத்தைவிட அந்தப் பொல்லாத அணில் குட்டிதான் அவர் கண் முன் வந்து நிற்கிறதோ!

அந்த வாயில்லா உயிரின்மீது அவருக்கு ஏன் அவ்வளவு ஆத்திரம்? பரம்பரை எதிரியைப்போல் அதைப் பாவிக்கிறாரே; அந்த அளவுக்கு அது அவருக்கு என்னதான் துரோகம் செய்துவிட்டது? பேசுவதை எல்லாம் பேசிவிட்டு கடைசியில் 'பாபம்' என்ற வார்த்தையையும் போட்டுக் கொள்கிறாரே!

'பாபம்'—அந்தப் பாபத்திற்கு இவ்வளவு வெறுப்புமிழும் சக்தியா இருக்கிறது?

முத்துவுக்கு இந்தக் கேள்விகளுக்கெல்லாம்கூட வழக்கம் போல் குழப்பம்தான் பதிலாகக் கிடைத்துக் கொண்டிருந்தது. அவன் என்ன செய்வான்? அது அவனுக்கே தெரியவில்லை!

அன்று ......

நீண்ட விடுமுறைக்குப் பிறகு பள்ளி திறக்கும் தினம்—முத்து புத்தாடை அணிந்து பள்ளிக்குப் புறப்பட்டான். அம்மா வழியனுப்ப வாசலுக்கு வந்தார்கள்! வாசலை விட்டு இறங்கி நடக்க ஆரம்பித்த முத்து, தயக்கத்துடன் திரும்பினான். அம்மாவின்

* 10-ம் பக்கம் பார்க்க

தொங்கும் பலகையில்...



"எங்கள் வீட்டுப் பையனை விளையாட்டு மைதானத்திலிருந்து சாப்பாட்டு வேளைக்காவது வீட்டுக்கு அழைத்து வருபவர்களுக்கு இனாம் தரப்படும்!"

உமாகாந்தன்; சென்னை-24

(?) நிதி மந்திரி சட்டசபையில் யாரைப் போல் நடந்து கொள்கிறார்?

ஆச்சாரியாரைப்போல் நடந்து கொள்ள முயற்சிக்கிறார்—ஆனால் தாளமும், சுருதியும் அடிக்கடி தவறி விடுகிறது; அவரது சங்கீதத்தில்' யாரும் சொல்லாததை . சொல்லிய தாக எடுத்துக் கொண்டு சொற்சிலம்பம் ஆடித் தன் கட்சியினரின் "கை அறிப்"பை அடக்குவதில்



அதிக அக்கரை காட்டுகிறார். பாவம்; இவ்வளவு நாள் சட்டசபையில் இருந்தும்—"பாலபாடம்" கூடப்படியாத வராகவே காட்சியளிக்கிறார். கனல் கக்குகிறார்; சுருத் துரையாற்றுவேன் எனப் பறை சாற்றுகிறார்; திடீரெனக் கழுநீர்ப் பானையில் கையை விடுகிறார்.

முஸ்தபா, சென்னை 6

(?) ஏக இந்தியாவாக ஒன்று பட்டு இருந்தால்தான் அந்நியச் செலாவணி முதலியவைக ளுச்கு வசதியாக இருக்கும் என்பது சரிதானா?

அத்தகைய தொடர்புகளைத் திராவிடத் தனியரசு பெற இயலாது என்று யார் கூறியது? அந்நியநாட்டு உதவிகள் பெற மத்ய சர்க்கார் என்ன; இடையே தரகரா?

தென்னன்; திருச்சி

(?) சட்டசபை இப்போது எப்படியிருக்கிறது?

வடக்கு வாழ்கிறது — தெற்கு தேய்கிறது எனபதற்கு ஆதாரங்களை எடுத்துக்காட்ட நமது கழகத்திற்கு ஒரு புதிய இடம் கிடைத்திருக்கிறது. வடக்கத்தி ஏகாதிபத்யத்தின் வால்பிடிக்கும் துரோகிகளுக்கு நேருக்கு நேராகவே விளக்கம் தரவும், விழிப் பூட்டவும் அருமையான சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

வேலன்; சென்னை

(?) திராவிடநாடு பிரிவினைபற்றி மந்திரி சுப்ரமணியம் சட்டசபையில் என்ன கருத்து தெரிவித்தார்?

இன்னும் பத்து ஆண்டு காலம் பொறுத்துக் கொள்ளச் சொல்கிறார். அதாவது அவர் ஒருமுறை மத்ய சர்க்காரிலும் மந்திரியாக இருந்து விட்டு, அந்த ஆசையையும் பூர்த்தி செய்து கொண்ட பிறகு திராவிடநாடு பற்றிப் போராடுங்கள் என்கிறார்.

எஸ். வைத்தினாதன்; சென்னை-6

(?) மந்திரி சுப்ரமணியம் தனக்கு நிகர் யாருமில்லையென்ற மமதை கொண்டிருப்பது உண்மைதானா?

அவருக்கு நிகர் யாருமில்லை தான்! முதலில் காமராசருக்குத் துரோகம் செய்துவிட்டு ஆச்சாரியாரிடம் இருந்தார். பிறகு ஆச்சாரியாரிடம் சரக்கு இல்லையென்றதும் காமராசரிடம் வந்திருக்கிறார். அவருக்கும் பக்தவத்சலத்திற்கும் மந்திரிப் பதவி கிடைத்தால் போதும்; யார் கட்சிக்கு வேண்டுமானாலும் போவார்கள்.

நந்தனார்; சிதம்பரம்

(?) மந்திரி கக்கன், காங்கிரஸ் தான் ஹரிஜனங்களின் வழி காட்டி என்கிறாராமே?

ஆமாம்; அவருக்கு மந்திரிப் பதவி கிடைத்து விட்டதல்லவா?

மேல்மாடியில் இருந்தோன், சென்னை

(?) திராவிடத்தில் வளங் குறைவு என்கிறாரே; நிதி மந்திரி—உண்மைதானா?

அவருடைய அறிவு வளத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பார்.

வி. சந்திரகாந்தன்; பெரம்பமேட், சென்னை.

(?) "வேலோடு நின்றான்" என்னும் குறளில் வருகிற "இரவு" என்ற சொல்லில் காணப்படும் "ர"கரம் வல்லினமே தவிர இடையினமல்ல என்றாராமே; நிதிமந்திரி—சரிதானா?

இலக்கியத்தில் "தமிழகம்" என்ற சொல்லே கிடையாது என்று வாதிட்ட நண்பரிடம் தமிழைப்பற்றிப் பேசி என்ன பயன்? வல்லினம், மெல்லினம், இடையினம் கிடக்கட்டும்; முதலில் அவர், தான் தமிழ் இனம், திராவிட இனம் எனபதையாவது ஒத்துக் கொள்வாரா?

வேதரத்தினம்; தஞ்சை

(?) திருவள்ளுவர், சுங்கவரி வசூலிக்கச் சொல்லியிருப்ப ஒரு காங்கிரஸ் பிரகிருதி கூறினாராமே; அது சரிதானா?

இறை பொருளும், சுங்கப் பொருளும், திறைபொருளும் அரசனுடைய பொருளாகும் என்றாரே தவிர, கொள்ளிடம் பாலத்தில் நின்று கொண்டு கொடுங்கோல் ஆட்சியாளர்கள் வேலோடு நிற்கும் கொள்ளைக்காரனைப் போல் சுங்கவரி வசூலிக்க வேண்டுமென்று குறளில் எடுத்துக் கூறவில்லை.

சந்தானம்; சென்னை—13

(?) நிதி மந்திரி, சபையில் பேசும் போது பின்னால் அடிக்கடி திரும்பிப் பாரப்பது எதற்காக?

கைதட்டச் சொல்லி காங்கிரஸ் உறுப்பினர்களுக்குக் கண் ஜாடை காட்டுவதற்காக!

பத்தாம் தேதியன்று
விற்பனைக்குக் கிடைக்கும்!

நாஞ்சில் கி. மனோகரன்
பி. சி. கணேசன்
கவிஞர் வாணிதாசன்
கவிஞர் முடியரசன்
ஆகியோரின்
எழுத்தோவியங்களுடன்

'முத்தாரம்'

ஜூலைத் திங்கள் இதழ்

வழக்கம்போல்
ஆசிரியர் மு. க. வின்
கவிதை நடைச் சிறுகதை உண்டு!
விலை 8 அணா

எஸ். வி. வேதகிரி; குடந்தை

(?) திராவிட முன்னேற்றக் கழகத்தார் கண்ணிருந்தும் காண மறுக்கிறார்கள்; காதிருந்தும் கேட்க மறுக்கிறார்கள் என்று ஒரு காங்கிரஸ் உறுப்பினர் குற்றம் சாட்டினாரே; அதுபற்றி உமது அபிப்பிராயமென்ன?

காணமறுப்பது உண்மைதான்! கர்த்தபங்களை சடுதென்களை எப்படிக் காண்பதற்கு விரும்ப முடியும்—குயிலிசை

கேட்டவர்கள் கோட்டான் சப்தத்தை எப்படிப் பொறுமையோடு கேட்க முடியும்?

சிவசுப்ரமணியம்; சிங்கம்புணரி

(?) தான் மட்டுமே அனுபவஸ்தர் என்றும், மற்றவர்கள் அனைவரும் அனுபவமற்றவர்கள் என்றும் கருதி அமைச்சர் சுப்பிரமணியம் பேசியது எதனால்?

கவர்னர் தம்பதிகள், அவரது சட்டசபை "முழக்கத்"தைக் கேட்டுக் கொண்டிருந்ததினால்!

பாலமாவோம் ...,

(முதல் பக்கத் தொடர்ச்சி)

காரிகையானாலும், மைந்தனின் மடல் நோககும் மாதாவானாலும் அவர்களைத் தங்களுக்காக பத்து நாளைக்குத் தபால்களை தியாகம் செய்யுமாறு கேட்டுக் கொண்டு அவர்களது ஆதரவைப் பெற இயலும்.

இதை நான் சொல்வது; இவ்வளவு வசதியிருக்கிறது — ஆகவே வேலை நிறுத்தம் செய்யுங்கள் என்று தூண்டிவிட அல்ல!

இவ்வளவு ஆற்றல் படைத்தவர்கள், ஆகவே அரசாங்கமே! அவர்களது குறைகளைக் கேள் என்று அரசுக்கு அச்சுறுத்துவதற்காகவே!

கிளர்ச்சிப் புகை கிளம்புகிற இடமெல்லாம் ஓடி எங்களை விளம்பரப்படுத்திக் கொள்ளும் நப்பாசை படைத்தவர்களல்ல நாங்கள்! அதற்காக அல்லலுறுவோர் பக்கம் நிற்காமல் ஓடிவிடுகிறவர்களும் அல்ல!

போருக்கு அகழ் கடந்து அரணுக்குள் நுழைய வேண்டுமாயின அந்த அகழில் பாலமாக இருந்து உங்களுக்குப் பணிபுரிகிறோம்!

பொதுமக்கள் தொடர்புக்கும் அவ்வாறே! அமைதி வழியில் அரசினருடன் கலந்து பேசி நன்முடிவுகாண்பதாயின் அதற்கும் அவ்வாறே உதவிட என்றும் தயாராயிருப்போம் என உறுதியளிக்கிறேன்"

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4-128, மவுண்ட்ரோடு, சென்னை-6, தமிழ்நாடு